வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்
Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 07.06.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 152 பக்கங்கள் : 16




## மத்திய கிழக்கு நெருக்கடிநிலை;

# கடுமையான உணவு தட்டுப்பாடு இலங்கையில் ஏற்படும் அபாயம்!

### உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை

ஜெனீவா, ஜூன். 07

மத்திய கிழக்கு போர் காரணமாக இலங்கையில் சுமார் 13 இலட்சம் பேர் அடிப்படை உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக உணவுத் திட்டதின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வில் இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.


இந்த விடயம் தொடர்பில் உலக உணவுத் திட்டத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் விரிவாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2026 ஆம் ஆண்டில் ஏற்கனவே மதிப்பிடப்பட்ட 47 இலட்சம் பேர் வரை பாதிப்படையக்கூடும் என அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக, 13 இலட்சம் பேர் கண்டறியப்பட்டுள்ளதாகவும் புதிய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

15

## புதிதாக உருவாக்கப்படும் அரசியல் கூட்டணிகளினால் மாற்றம் ஏற்படாது!

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஜூன். 07


புதிதாக உருவாக்கப்படும் அரசியல் கூட்டணிகளால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்படும் அரசியல் கூட்டணிகளால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை எனக் குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி, நாட்டின் தற்போதைய நிலைமைகளை மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், அதற்கேற்பவே அவர்கள் முடிவுகளை எடுப்பார்கள் என்றும் வலியுறுத்தினார். (அ)

## பயங்கரவாதத் சட்டத்துக்கு எதிராக நேற்று எழுச்சி கொண்டனர் மக்கள்!

### பாடகர் கைதைக் கண்டித்து போராட்டம்



கிளிநொச்சி, ஜூன். 07

அரச பயங்கரவாதத்தின் கீழ், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தித் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டுள்ள கலைஞனை விடுவிக்கக் கோரி, மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்

15

## நாணய நிதிய பணத்தைக் கொண்டு ரூபாயின் மதிப்பை மாற்ற முடியாது!

### டீசல் விலையும் உயர வாய்ப்பு!!

கொழும்பு, ஜூன். 07

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுதவியைக் கொண்டு, மாற்று விகித சந்தையில் ரூபாயின் மதிப்பை வலுக்கட்டாயமாகக் கீழே கொண்டுவர முடியாது என பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

"சர்வதேச நாணய நிதியத்தின் நிதி கிடைத்தவுடன் நாட்டின் பொருளாதார நிலைமைகளில் ஒரு எல்லைக்குள் மாற்றம் ஏற்படும் என நாம் எதிர்பார்த்தோம்.

எனினும், அந்த நிதியை சந்தைக்குள் விடுத்து ரூபாயின் மதிப்பை மீட்டு கொண்டுவர முடியாது.

நாம் செலவிடும் தொகையைக் குறைத்துக் கொள்வதன் மூலம், இறக்குமதிகள் ஓரளவு

15

## ஊடகவியலாளர்களுக்கு புதிய ஒழுக்கக் கோவை!

கொழும்பு, ஜூன். 07

நாட்டின் ஊடகத் துறையில் பணியாற்றும் உயர் தொழிலாளர்களுக்கான தொழில்சார் நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றைப் பேணுவதற்கும் ஏதுவாக "இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம்" எனும் புதிய அமைப்பைத் தாபிப்பதற்கான சட்டமூலம் அரசாங்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரின் பணிப்புரைக்கு அமைவாக, 2026ஆம்

15

## "13" ஐ அதில் உள்ளபடியே நடைமுறைப்படுத்த தயார்!

### சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 07

நாட்டில் அரசியலை முன்னெடுத்து வரும் பல தரப்பினர் சர்வதேசத்தை சந்தித்த சமயங்களில் "13 பிளஸ்" என்று கூறிவிட்டு, நமது நாட்டுக்கு வந்து சில பிரதேசங்களில் கூட்டங்களை நடத்தி, "13 மைனஸ்" என்று இரட்டை வேட பேச்சுக்களைப் பேசினர். ஐக்கிய மக்கள் சக்தி இத்தகைய இரட்டை வேட பேச்சுக்களைப் பேசாமல், 13ஆவது திருத்தத்தை அதில்

15

## முல்லைத்தீவு பொலிஸ் ஆக்கிரமித்துள்ள தனியார் காணியை விடுவிக்கவேண்டும்!

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூன். 07

முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அமைந்துள்ள தனியார் காணி உடனடியாக விடுவிக்கப்படவேண்டுமென வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் வலியுறுத்தலையடுத்து குறித்த காணியை விடுவிப்பதற்கு பொலிஸார் மூன்று மாத கால அவகாசம் கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை எப்போது விடுவிக்கப்போகின்றீர்கள். அந்தக்காணி மு.நாகம்மா என்பவருக்குரிய ஒரு தனியார் காணியாகும்.

குறித்த காணி விடுவிப்புத் தொடர்பாக மாகாண சபைக் காலத்திலும் வலியுறுத்தியிருக்கின்றேன். இருப்பினும் இதுவரை குறித்த காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் அந்தக் காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காணி உரிமையாளர்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

15

## மூவின மக்களும் ஏற்றுக்கொள்ளும் புதிய அரசமைப்பு நிச்சயம் வரும்!

### பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



கொழும்பு, ஜூன். 07

இலங்கையில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது, நாட்டில் உள்ள சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவின

15

## சாகும்வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் சுரேஷ் சாலே!

### உதய கம்மன்பில தகவல்

கொழும்பு, ஜூன். 07

சிறைக்குள் தமக்கு இழைக்கப்படும் மனிதாபிமானமற்ற கொடுமைகளுக்கு எதிராக அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே, சாகும் வரை உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இரண்டாம் சங்கிலிய மன்னனின் 407ஆவது சிரார்த்த தினம் யாழில்

யாழ்ப்பாணம், ஜூன். 07

இரண்டாம் சங்கிலிய மன்னனின் 407ஆவது சிரார்த்த தினம் நேற்று சனிக்கிழமை யாழ் நல்லூர் பகுதியில் உள்ள சங்கியன் உருவச் சிலையில் சிவத் தொண்டர் சிறீந்திரன் தலைமையில் இடம்பெற்றது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலிய மன்னனுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து சங்கிலிய மன்னனின் வாழ்க்கை வரலாறு அடங்கிய கண்காட்சிக் கூடம் திறந்து வைக்கப்பட்டு விருந்தினர்கள் உரை இடம் பெற்றது.

ஈழத்து ஞான குழந்தை சுதர்சன் அருணனின் விசேட பேச்சும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் டி.வி.அரவிந்தராஜ், பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், சிறீசுந்தர ஆஞ்சனேயர் ஆலய பிரதம குரு சுந்தரேஸ்வர குருக்கள், இந்து சமய பேரவைத் தலைவர் சக்தி கிரீவன், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

## யாழ்ப்பாணத்தில் நேற்றும் தொடர்ந்த சுகாதார தொண்டர்களின் போராட்டம்

### நடைபெறவிருந்த நேர்முகத் தேர்வும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 07

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சுகாதார தொண்டர்கள், தமக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு விடுக்கப்படவேண்டும் எனக் கோரி நேற்றும் போராட்டம் நடத்தினர். இதனால் நேற்று நடைபெறவிருந்த சுகாதாரப் பணியாளர்கள் வெற்றிடத்திற்கான நேர்முகத் தேர்வும் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதாரப் பணியாளர்கள் வெற்றிடத்திற்கான நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு 92 பேருக்கு விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 5 வருடங்களாக பணியாற்றம் தமக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட பின்னரே ஏனையோருக்கு வழங்கப்படவேண்டும் என கோரி யாழ். போதனை வைத்தியசாலை



சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

இதன்போது நேர்முகத் தேர்வுக்கு வந்தவர்களுக்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதாரத் தொண்டர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

பின்னர் நேர்முகத் தேர்வுக்கு வந்த அதிகாரி ஒருவர், இந்த விடயம் பிரச்னைக்குரியதென்பதால் வேறு ஒரு தினத்துக்கு நேர்முகத் தேர்வை நடத்தவுள்ளதாக தெரிவித்த நிலையில் நேர்முக தேர்வுக்கு வந்தவர்கள் அங்கிருந்து நகர்ந்து சென்றனர்.

இருப்பினும் சுகாதார தொண்டர்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-05)

### புத்தூரில் நடந்த டிப்பர் விபத்து;

## படுகாயமடைந்த இளைஞர் உயிரிழப்பு! மேலும் இருவர் அதிதீவிர சிகிச்சையில்!!

யாழ்ப்பாணம், ஜூன். 07

புத்தூர் பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற டிப்பர் - ஓட்டோ விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர் தீவிர சிகிச்சை பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புத்தூர் வீதியில் மட்டுவில் பகுதியில் இருந்து புத்தூர் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனமும், ஓட் டோவும் மோதி விபத்துக்கு உள்ளாகின.

குறித்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூன்று இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில், மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்த நிலையில், ஏனைய இருவருக்கும் அதிதீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## கற்கோவளம் கடற்கரையில் பரவிய தீ கட்டுக்குள் வந்தது!

யாழ்ப்பாணம், ஜூன். 07

வடமராட்சி கற்கோவளம் பகுதியில் கடலரிப்பைத் தடுக்கக் கூடிய இயற்கையாக வளர்ந்திருந்த புல்லில் திடீரென தீ பற்றிய நிலையில் பல மணி நேரப் போராட்டத்தின் மத்தியில் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நேற்று முன் தினம் இரவு 7:00 மணியளவில் கற்கோவளம் கடற்கரை பகுதியில் கரையோரமாக வளர்ந்துள்ள புல் தொடர் பகுதியில் தீ பரவியமை தொடர்பாக பிரதேச மக்களால் வட்டார பிரதேச சபை உறுப்பினர் ரமணனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந் நிலையில் உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச சபை உறுப்பினர் ரமணன் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு சம்பவத்தை தெரிவித்து தீயை அணைப்பதற்காக தண்ணீர்த் தாங்கிகளை அனுப்புமாறு கோரிக்கை விடுத்திருந்த நிலையில் உடனடியாகவே பிரதேச சபையின் செயலாளர் தண்ணீர் தாங்கியை அனுப்பியுள்ளார்.

இந் நிலையில் பிரதேச மக்களுடன் சேர்ந்து பிரதேச உறுப்பினரும், பிரதேச சபை ஊழியரும் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட இடைவேளை வடமராட்சி வடக்கு பிரதேச செயலருடனும் தொடர்பு கொண்ட பிரதேச உறுப்பினர் அவரிடமும் உதவி கோரினார். சம்பவ இடத்திற்கு கிராம சேவகரும் சென்றிருந்தார். மக்கள், பருத்தித்துறை பொலிஸாரும் சேர்ந்து தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் கடற்படையினரும் தங்கள் நீர் தாங்கியை கொண்டு சென்று தீயணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு தீயை முழுமையான கட்டுப்பாட்டுகள் கொண்டு வந்தனர். (அ)

## சுவிஸில் இருந்து யாழ்.வந்தவர் படுகொலை 2 சந்தேக நபர்கள் நேற்று அதிகாலை கைது!

### மானிப்பாய் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 07

சுவிஸில் இருந்து சண்டிலிப்பாய் பகுதிக்கு வருகை தந்த முதியவர் ஒருவர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டதுடன் நகை மற்றும் பணம் என்பன களவாடப்பட்டிருந்தன.

இந்தக் கொலையை மேற்கொண்ட சந்தேக நபர்கள் தலைமறைவாகி இருந்த நிலையில் நேற்று அதிகாலை அவர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் இந்த கைது நடவடிக்கை நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. இதன்போது அவர்களிடமிருந்து சில சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## தியாகி பொன் சிவகுமாரனின் நினைவு நிகழ்வு வவுனியாவில்

வவுனியா, ஜூன். 07

முதல் மாவீரர் தியாகி பொன் சிவகுமாரனின் 52 ஆவது ஆண்டு நினைவு நாள் வவுனியாவில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா, குருமன்காடு பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாட்டு குழுவின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

வட்டுக்கேட்டை 50 எழுச்சி மாநாட்டின் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் எழுச்சி மாநாட்டை முன்னிட்டு செயற்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், முதல் மாவீரர் தியாகி பொன் சிவகுமாரனின் திருவுருவப்படத்திற்கும் தீபம் ஏற்றியும், மாலை அணிவித்தும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாட்டுக் குழுவினரும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினரும் கலந்து கொண்டனர். (அ)

## அகில இலங்கை மீனவ கூட்டமைப்பின் 5ஆவது ஆண்டு விழா யாழ்ப்பாணத்தில்!



யாழ்ப்பாணம், ஜூன். 07

அகில இலங்கை மீனவ மற்றும் தொழிலாளர் கூட்டமைப்பின் 5ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மீனவ சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், மலையக மக்களின் பிரச்னைகள், ஏனைய தொழில்சார் அமைப்புக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், தமிழ் மக்களது பிரச்னைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்கள் படும் துன்பங்கள் குறித்து தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழக மீனவர்களுடன் சந்திப்பு நடத்துவது குறித்தும் பேசப்பட்டது.

இதில் குறித்த அமைப்பின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-05)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பல்கலைகளில் விரிவுரையாளர் பற்றாக்குறை தீவிர நிலையில்!

## ஆசிரியர்கள் சம்மேளனம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 07

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்கள், ஓய்வு பெறுவதாலோ அல்லது விலகிச் செல்வதாலோ ஏற்படும் பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கோ, தகுதியானவர்களை இணைத்துக் கொள்வதற்கோ அனுமதி வழங்குவதில்லை என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பிரதீத் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய பல்கலைக்கழக அமைப்பில் எழுந்துள்ள நெருக்கடிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், நோக்கில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு நாட்டின் உயர் கல்வி என்பது நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் காரணியாகும் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை நோக்கி நாம் பயணிக்கும் போது, பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதற்குத் தேவையான மனித வளங்களை அதாவது மருத்துவர்கள், சட்டத்தரணிகள், கணக்காய்வாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில் வல்லுநர்களை உருவாக்குவது இந் நாட்டின், அரச பல்கலைக்கழக அமைப்பாகும். குறிப்பாக அரச பல்கலைக்கழக அமைப்பில் பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர்களுக்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை வளர்த்து, தகுதியான ஒரு பட்டதாரியை உருவாக்கிச் சமூகத்துக்கு வழங்கும். இந்தச் செயல்பாட்டில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. இன்று இந்தச் செயல்பாட்டைச் சரியாகக் கொண்டு செல்வதற்குக் கல்வித் தகுதியும் திறமையும் கொண்ட விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களின் பற்றாக்குறை நிலவுகிறது. இது குறித்து ஒன்றரை வருடங்களுக்கு முன்பும் இதே போன்று பேசப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இன்று அந்தப் பிரச்னை மேலும் தீவிரமடைந்து பல்கலைக்கழக அமைப்பைப் பெரியதொரு நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது.

இன்னும் சிறிது காலத்தில் சுமார் 50,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்கப்படவுள்ளனர். ஆனால் இந்தப் பிரச்னை இப்படியே நீடித்தால், தகுதியான விரிவுரையாளர்களைப் பல்கலைக்கழக அமைப்பிற்குள் இணைத்துக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. விளம்பரம் செய்தாலும் சில குறிப்பிட்ட துறைகள் அல்லது பாடநெறிகளுக்குத் தேவையான விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்ள முடியாத நிலை உள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்கள், ஓய்வு பெறுவதாலோ அல்லது விலகிச் செல்வதாலோ ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கோ, தகுதியானவர்களை இணைத்துக் கொள்வதற்கோ அனுமதி வழங்குவதில்லை. இதனால் பல்கலைக்கழகத்தின் சாதாரண செயல்பாடுகளைக் கூட முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (அ)

# 2029 இற்கு முன்னர் ரணில் மீண்டும் ஜனாதிபதியாவார்!

## ராஜித சேனாரத்ன நம்பிக்கை



கொழும்பு, ஜூன். 07

"2029 ஆம் ஆண்டுக்கு முன்னரே ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி ஆவார். நாட்டுக்காக அவர் சவாலை ஏற்பார். வலுக்கட்டாயமாகவேனும் நாம் அவரை அழைத்துவருவோம்."

-இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

2ஆவது தடவையும் நாடு வங்குரோத்தடைந்தால் மீண்டெழுவது கடினம் என ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டி இருந்தார். எனவே, அவ்வாறான தொரு நிலை ஏற்படுவதற்கு முன்னர் ரணிலுக்கு ஆட்சி கிடைக்கப்பெற்றால் சர்வதேசத்துடன் பேச்சு நடத்தி, மீண்டெழக்கூடும்.

மக்களிடம் உண்மையைக் கூறியே ஆட்சியை பொறுப்பேற்க வேண்டும். தம்மால் முடியும் என்பதை செய்து காட்டிய தலைவரே ரணில் விக்கிரமசிங்க. ரணிலின் பொருளாதார மீட்சித் திட்டம் குறித்து சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள்கூட பாராட்டினார்கள்.

நாட்டை மீட்டெடுப்பதற்குரிய பயணத்தில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் இணைவார். அவரை பலவந்தமாகவேனும் கொண்டுவருவோம்.

நெருக்கடி நிலையை மக்களுக்கு தாங்க முடியாதவேளை புரட்சி வெடிக்கும். கிறிஸ் நாட்டில் நான்கு தடவைகள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டன. இலங்கையில் தற்போது புதிய அரசியல் கலாசாரமே உள்ளது. ரணில் விக்கிரமசிங்க 2029ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதியாகக்கூடும்- என்றார். (அ)

# பழமையான கத்தோலிக்க ஆலயத்தில் புதையல் அகழும் நடவடிக்கை தீவிரம்!

## மன்னார் மக்கள் கடும் விசனம்



மன்னார், ஜூன். 07

மன்னார் - சவுத் பார் பகுதியில் நீண்ட காலமாக பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் உள்ள மிகவும் பழமையான கத்தோலிக்க ஆலயம் ஒன்றில் மர்ம நபர்கள் சிலர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆலயம் எவ்வித முழுமையான கட்டுமானங்களும் இன்றி, முற்றிலும் சேதமடைந்த நிலையில் பல வருடங்களாக காணப்படுகின்றது.

மிகவும் பழமை வாய்ந்த இந்த ஆலயப் பகுதியில் குறித்த சட்டவிரோத அகழ்வு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதையல் தோண்டபட்ட தாகக் கூறப்படும் இடத்தில், மர்ம நபர்கள் விட்டுச் சென்ற சில தடயங்களும் பொதுமக்களால் அவதானிக்கப்பட்டுள்ளன.

அகழ்வு இடம் பெற்ற பகுதியில் திருஷ்டி நூல்கள், கற்கள் மற்றும் பூசைக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சில பொருள்களும் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆலயம் அமைந்துள்ள பகுதி அதிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புனித ஜோசப் வாஸ் முனிவர் இலங்கைக்கு முதல் முறையாக வருகை தந்த பகுதிக்கு மிக அருகிலேயே இந்த ஆலயம் அமைந்துள்ளது. எனினும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இப்பகுதியில் உள்ள குறித்த ஆலயம் நீண்ட காலமாக உரிய பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்பள்ளிக் கல்வியின் தரத்தை உறுதி செய்வது அரசின் பொறுப்பு

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 07

ஒரு குழந்தையின் எதிர்காலக் கல்விப் பயணத்தை நிர்ணயிக்கும் முக்கியமான கட்டமாக முன்பள்ளிக் கல்வி அமைவதால், அதன் தரத்தை உறுதி செய்வது அரசின் பொறுப்பாகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற கல்வி கண்காணிப்பு விஜயத்தின் போது, வடமேல் மாகாண முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் 2023/2024 கல்வியாண்டுக்கான முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் குருநாகல் மாகாண சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு அவர் இந்தக் கருத்துகளை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வி நடவடிக்கைகள் முறையான கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். எதிர்வரும் சில ஆண்டுகளில் ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வியில் நிலைத்தன்மையை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. அதற்காக தேசிய கல்வி ஆணைக்குழு, பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து கல்விக் கொள்கைகள், ஆசிரியர் பயிற்சிக்கான தரநிலைகள் மற்றும் அவற்றை கண்காணிக்கும் ஒழுங்குமுறைகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டிலேயே முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் மூலம் 2027 ஆம் ஆண்டளவில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான முன்பள்ளி பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளோம்.-என்றார். (அ)

# வடமராட்சி மீனவர்களுக்கு உயிர் காக்கும் அங்கிகள்!

யாழ்ப்பாணம், ஜூன். 07

வடமராட்சி கற்கோவளம் பகுதியில் தமிழ் மக்கள் கூட்டணியினரால் மீனவர்களுக்கான உயிர்காக்கும் அங்கிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

உயிர்காக்கும் அங்கிகள் வழங்கும் நிகழ்வு கற்கோவளம் பொது மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

அங்கிகளை தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வழங்கினார்.

இதில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் பத்மநாதன் மயூரன், யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன், வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஜெய பிரதாபன், கற்கோவளம் கடற்றொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அண்மையில் உரிய பாதுகாப்பு அங்கி இன்றி கடற்தொழிலுக்கு சென்று நான்கு மீனவர்கள் காணாமல் போயிருந்தனர். (அ)

# வெளிநாட்டு கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன். 07

இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு சொத்துக்கள் கடந்த மே மாதத்தில் 1.6 வீதத்தால் அதிகரித்து, 6.873 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் 6.766 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்ட கையிருப்பு, மே மாதத்தில் 107 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அண்மைய புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இந்த உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் எண்ணிக்கையானது, சீன மக்கள் வங்கியுடனான நாணயப் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியையும் உள்ளடக்கிய ஒன்றாகக் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்திய அரிசி இறக்குமதியால் உள்நாட்டு நெல் விலை வீழ்ச்சி!

## தேசிய விவசாய ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 07

2024, 2025ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட நெல் இருப்புக்கள் இன்னும் விவசாயி களின் வீடுகளில் தேங்கிக் காணப் படும் நிலையில் இந்திய அரிசி இறக்குமதியால் உள்நாட்டு நெல் விலை வீழ்ச்சிக்கு முதன் மைக் காரணமாகும் என்று தேசிய விவசாய ஒன்றியத்தின் செயலாளர் உபாலி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

உருளுவெவ பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்,

இலங்கையில் எரிபொருள் உள்ளிட்ட அனைத்து அத்தியா வசியப் பொருள்களின் விலைக ளும் நாளாந்தம் அதிகரித்து வரும் பின்னணியில், உள்நாட்டு நெல்லின் விலை மாத்திரம் பாரி யளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

குறிப்பாக, 2024, 2025ஆம் ஆண்டு நெற்பயிர் செய்கை பருவத்தில் உற்பத்தி செய்யப் பட்ட உயர்தர நாடு நெல் இருப் புக்கள் இன்னும் விவசாயிகளின் வீடுகளில் தேங்கிக் காணப்படும் நிலையில், சந்தையில் நெல் கிலோ ஒன்றின் விலை 95 முதல் 100 ரூபாய் வரை மிக மோசமா கக் குறைவடைந்துள்ளது.

உள்நாட்டில் போதியளவு நெல் இருப்பு இருக்கும் பட்சத் தில், இந்தியா உள்ளிட்ட வெளி நாடுகளில் இருந்து அரிசி இறக் குமதி செய்யப்படுவதே இந்த விலை வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணமாகும்.

இதனால் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் உள்நாட்டு நெல்லைக் கொள்வனவு செய்ய மறுப்பதனால், விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, அதிகாரிகள் வழங் கும் தரவுகளை மட்டும் நம்பியி ருக்காமல், களமிறங்கி உண்மை யான விவசாயிகளின் நிலைமை யைக் கேட்டறிந்து இதற்கு உட னடித் தீர்வு வழங்க வேண்டும். அத்துடன், இலங்கையின் விவ சாயத்துறைக்குள் இந்திய ஆதிக் கம் திணிக்கப்படுவதை முற்றாக தவிர்க்க வேண்டும்-என்றார்.

## இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளன விவாத போட்டியில் காரைதீவு பிரதேச சபை வெற்றி

அம்பாறை, ஜூன். 07

இலங்கை உள்ளூராட்சி மன் றங்களின் சம்மேளன ஏற்பாட் டில் நடைபெற்ற மாகாண மட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கி டையிலான விவாதப் போட்டி யில் காரைதீவு பிரதேச சபை சிறப்பான வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இப்போட்டியில் காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர்க ளும், ஏறாவூர் நகர சபை உறுப் பினர்களும் பங்கேற்று தமது கருத்துக்கள் மற்றும் வாதங்களை முன்வைத்தனர். போட்டியின் இறுதியில், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள் 299 புள்ளி களைப் பெற்று முன்னிலை வகித் ததுடன், ஏறாவூர் நகர சபை உறுப்பினர்கள் 254 புள்ளிகளைப் பெற்றனர்.

இதன்மூலம் 45 புள்ளிகள் வித்தியாசத்தில் காரைதீவு பிர தேச சபை வெற்றியீட்டியுள்ளது.

உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்களின் அறிவாற்றல், பகுப் பாய்வுத் திறன், பொதுக் கொள் கைகள் தொடர்பான புரிதல் மற்றும் மேடைப் பேச்சுத் திறன் களை மேம்படுத்தும் நோக்கில் இவ்விவாதப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)



## உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு பழமரக்கன்று வழங்கல்



கிளிநொச்சி, ஜூன். 07

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி - கண் டாவளை பிரதேச செயலகத் தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு பழமரக்கன்று கள் வழங்கும் நிகழ்வும், மரந டுகை நிகழ்வும் நேற்று முன் தினம் உமையாள்புரம் பொது நோக்கு மண்டபத்தில் நடை பெற்றது.

கண்டாவளை பிரதேச செய லாளர் த.பிருந்தாகரன் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ் வில், பாடசாலை மாணவர்கள் 100 பேருக்கு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து உமையாள்புரம் பகுதியில் அமைந்துள்ள ஏ-9 வீதியோரத்தில் 300 மரக்கன்று கள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாய கன், மாவட்ட அரசாங்க அதி பர் எஸ்.முரளிதரன், 553ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் ஜே.முதுநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பரந் தன் நகரில் வடமாகாண ஆளு நர் தலைமையில் சிரமதானப் பணி ஆரம்பித்து வைக்கப்பட் டது. இதன்போது சுற்றுச்சூழ லுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டன.

## இணைய மோசடிகளை தடுப்பதற்கு இலங்கை-சீனா கூட்டு நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 07

இணைய வழி சூதாட்டம், தொலைத்தொடர்பு மோசடி கள் மற்றும் அவை சார்ந்த குற் றச் செயல்களுடன் தொடர்பு டைய குழுக்கள் பிற நாடுகளில் இருந்து இலங்கைக்கு இடம் பெயர்வதைத் தடுப்பதற்காக, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுச் சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் மேலும்வலுப்படுத்தப்பட்டுள் ளன.

கொழும்பிலுள்ள சீன தூத ரகம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கையின் வெளிவிவகார, நிதி மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கள் உள்ளிட்ட சம்பந் தப்பட்ட நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு மேம்படுத்தப் பட்டுள்ளதுடன், இரு நாடுகளி னதும் சட்ட அமுலாக்க முகவர் நிறுவனங்களுக்கு இடையிலான நடைமுறை ரீதியான ஒத்துழைப் பும் வளர்ச்சியடைந்துள்ளதாக கொழும்பிலுள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை கள் மற்றும் விசாரணைகளின் போது, பல சட்டவிரோத சூதாட்ட மற்றும் மோசடி நிலை யங்கள் முற்றுகையிடப்பட்டு, பெருமளவிலான சந்தேகநபர் கள் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் அதில் குறிப்பிடப்பட் டுள்ளது.

அந்த சந்தேக நபர்களில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் உள்ளடக்கப்பட்டுள் ளதுடன், மோசடி நடவடிக்கை களுடன் தொடர்புடைய சில சீன பிரஜைகள் சீன அதிகாரிக ளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாகவும் தூதரகம் தெரிவித்துள் ளது.

எல்லை தாண்டிய சூதாட்ட நடவடிக்கைகள் குறித்து சீன அரசாங்கத்தின் நிலைப்பாடு கடுமையானது எனவும், சீனப் பிரஜைகள் வெளிநாட்டு சூதாட்ட விடுதிகளை இயக்குவது அல்லது அவற்றில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சீனாவும் இலங்கையும் இணைந்து இந்த குற்றவியல் வலையமைப்புகளை அடக்கு வது, சந்தேக நபர்களை சட்டத் தின் முன் நிறுத்துவது மற்றும் அவர்களின் நிதி மற்றும் நிறு வன கட்டமைப்புகளை உடைப் பதன் மூலம், இரு நாட்டு மக்க ளின் உயிர்கள், சொத்துக்கள் மற்றும் சட்டபூர்வமான உரி மைகளைப் பாதுகாக்க முடியும் என்றும் சீன தூதரகம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (அ)

## நாச்சிக்குடா கரையோரத்தை பாதுகாக்க நடுகை செய்யப்பட்ட கண்டல் தாவரங்கள்

கிளிநொச்சி, ஜூன். 07

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட நாச்சிகுடா பிரதேசத்தில் கடற் கரையோரத்தை பாதுகாக்கும் நோக்கில் நேற்று முன் தினம் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

உலக சுற்றாடல் தினத்தை யொட்டி கடல் வாழ் உயிரினங் களின் பெருக்கத்தை அதிகரிப்ப தற்கும் இயற்கை சமநிலையை பேணும் வகையிலும் மெசிடோ அமைப்புடன் பிரதேச கடற் தொழிலாளர்கள் இணைந்து குறித்த கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன. நாச்சிகுடா கரையோர பகுதி முழுவதும் குறித்த கண்டல் தாவ ரங்கள் நடுகை செய்யப்பட்டுள் ளன.

கடந்த ஆண்டிலும் இவ்வாறு கடல் வாழ் உயிரினங்களை பாது காக்கவும் மீன் இனப்பெருக் கத்தை அதிகரிக்கவும் இயற்கை சூழலை பேணும் வகையிலும் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

குறித்த கரையோரப் பகுதி களில் இதுவரை ஆயிரத்து 76 இற்கும் மேற்பட்ட கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் கடற்தொழிலாளர் கள், மெசிடோ நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், கடற்தொ ழிலாளர்சங்கங்களின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண் டிருந்தனர். (அ)

## கதிர்காமம் காட்டுப்பாதை ஜூலை 10 ஆம் திகதி திறப்பு

காரைதீவு, ஜூன். 07

2026ஆம் ஆண்டுக்கான கதிர்காம காட்டுப்பாதை திறப்பு ஜூலை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை என அதிகார பூர்வமாக தீர்மானித்து அறிவிக் கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை கதிர்காமத்தில், மொன ராகலை அரசாங்க அதிபர் தலை மையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக் கப்பட்டது.

அக் கூட்டத்திற்கு குடிதண் ணீர் வழங்கும் சமூக அமைப்பி னர் உள்ளிட்ட சிலர் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்டனர். எனினும் காட்டுப் பாதை திறப்பு தொடர்பான திகதி குறித்து இவர்களது கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லையென தெரியவருகிறது.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மா னத்துக்கு அமைவாக பின்வரும் முக்கிய நிகழ்வுகளுக்கான தி திகள் அறிவிக்கப்பட்டன.

காட்டுப்பாதை திறப்பு: 2026.07.10 வெள்ளி

காட்டுப்பாதை மூடல்: 2026.07.25 சனி

கந்தனின் ஆடிவேல் திருவிழா ஆரம்பம்: 2026.07.15 புதன்

கந்தனின் தீர்தோற்சவம்: 2026.07.30 வியாழக்கிழமை

15 நாட்கள் மட்டுமே காட்டுப்பாதை பக்தர்களுக்காக திறந்திருக்கும். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
07.06.2026 ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சுவாரஸ்யமான கட்டத்திற்குள் நுழையும் தமிழக அரசியல்

நடிகர் விஜய் தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சர் கதிரையைப் பிடித்து மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து பாரம்பரிய திராவிட இரு முனை அரசியல் தகர்க்கப்பட்ட பிறகு சுவாரஸ்யமான அரசியல் நிகழ்வுகளை உடனடியாகவே காணக்கூடியதாக இருக்கிறது.

பாரதிய ஜனதாவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கட்சியில் இருந்து வெளியேறிய கையோடு "நாங்கள் தலைவர்கள்" (We The Leaders) - அண்ணாமலை மக்கள் இயக்கத்தை தொடங்கிய அதேவேளை, நடிகர் ரஜினிகாந்தின் மனைவி லதா மக்கள் மேடை என்ற சிவில் அமைப்பை தொடங்கியிருக்கிறார். இரு அமைப்புக்களின் ஒரே நேரத்திலான வரவு மாநில அரசியலில் புதிய அம்சத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்ற போதிலும், அவை முதலமைச்சர் விஜய்க்கு உடனடி அச்சுறுத்தலாக இருக்குமா என்பது அவர்கள் எந்த வகையான அரசியலை முன்னெடுக்கப் போகிறார்கள் என்பதிலேயே தங்கியிருக்கிறது.

விஜய் முதலமைச்சர் பதவிக்கு வருவதற்கு அடித்தளமாக அமைந்த இளந்த லைமுறை வாக்காளர்களையும் (ஜென் இசட் - Generation Z) பாரம்பரிய வாரிசு அல்லது தனிநபர் வழிபாட்டு அரசியலினால் சலிப்படைபடைந்தவர்களை யுமே அண்ணாமலையும் குறிவைக்கிறார். அவரது இயக்கம் தொடங்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே 8 இலட்சத்துக்கும் அதிகமான தன்னார்வலர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்திருக்கிறார்கள்.

தான் ஒரு தனிநபர் வழிபாட்டு இயக்கத்தை ஆரம்பிக்கவில்லை என்றும் அடுத்த பொதுத் தேர்தலை நோக்கி பயணிப்பதாகவும் கூறியிருக்கும் அண்ணாமலை, தேசியக் கட்சியின் பிடியில் இருந்து விடுபட்டிருப்பதன் மூலம் மாற்றத்தை விரும்பும் மக்களின் வாக்குகளுக்காக விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துடன் நேரடியாகப் போட்டியிடும் நிலை நாளடைவில் உருவாகும் என்று தெரிகிறது.

விஜய்யின் இளம் அரசாங்கம் நிருவாகத் தடுமாற்றங்களை எதிர்கொள்ள நேரிட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மீண்டும் செல்ல விரும்பாத நகர்ப்புற மற்றும் படித்த வாக்காளர்களுக்கு அண்ணாமலையின் அமைப்பு சிறந்த ஒரு மாற்றாக அமையும் என்பது பெரும்பாலான தமிழக அரசியல் அவதானிகளின் அபிப்பிராயமாக இருக்கிறது.

தனது மக்கள் மேடை ஒரு சிவில் சமூக மாற்றத்துக்கான தளமாக முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் இயங்கும் என்று லதா ரஜினிகாந்த் அறிவித்திருக்கிறார். இது பாரம்பரியமான ஆக்ரோஷமான அரசியல் கட்சியாக தொடங்கப்படாவிட்டாலும், ரஜினிகாந்த் நேரியடியாக தேர்தல் அரசியலில் ஈடுபடாமல் விலகியிருந்தாலும், அவரது பல தசாப்தகால பெரும் ரசிகர் பட்டாளம் மீண்டும் இணையக் கூடிய ஒரு மையப்புள்ளியாக லதாவின் இயக்கம் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


அண்ணாமலையினதும் லதாவினதும் அமைப்புக்கள் தனித்துவமான அச்சுறுத்தலாக மாறி முதலமைச்சர் விஜய்யின் பதவியை இப்போதைக்கு பறித்துவிட முடியாது. ஆனால், அவை முதலில் தங்களை செல்வாக்கு மிக்க அழுத்தக் குழுக்களாக மாறுவதில் எந்தளவுக்கு வெற்றி பெறுகின்றன என்பதிலேயே அவற்றின் எதிர்கால வாய்ப்புக்கள் தங்கியிருக்கின்றன என்றும் அவதானிகள் கூறுகிறார்கள்.

முதலமைச்சர் விஜய் மக்கள் அங்கீகாரத்தையும் அரசாங்க அதிகாரத்தையும் தன் கையில் வைத்திருந்தாலும், அவரது ஆரம்பக்கட்ட ஆட்சிக்காலம் கூர்மையாக கண்காணிக்கப்படுகிறது. திராவிட இயக்கத்தின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் புதிய அரசாங்கத்தில் குறைகளைக் கண்டுபிடிப்பதற்கு "ஓவர் ரைம்" வேலை செய்கின்றன.

தேசிய கட்சியின் சுமையை இறக்கி வைத்துவிட்டு தமிழ் அடையாளத்தை நோக்கிப் பயணிக்கும் அரசியலில் இறங்கியிருக்கும் அண்ணாமலை தன்னை விஜய்க்கு முதன்மையான மாற்றுச் சக்தியாக மக்கள் முன்னிறுத்தமுடியும் என்று நம்புகிறார் போலும். எது எவ்வாறிருந்தாலும், ஒரு அரசியல் உண்மை மாத்திரம் தெரிகிறது. பிரதான திராவிட இயக்க கட்சிகளின் சரிவினால் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் வெற்றிடம் நெடுகவும் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துக்கு மாத்திரம் சொந்தமாக இருக்காது என்று தெரிகிறது.

# உண்மையைக் காணமறுக்காத ஒரு பத்திரிகையாளர்

### டி.பி.எஸ். ஜெயராஜுக்கு (1954-2026) ஒரு அஞ்சலி



*2026 மே 17 ஆம் திகதி* டி.பி.எஸ். ஜெயராஜ் தனது இறுதிக் கட்டுரையை 'தி மார்னிங்' (The Morning) பத்திரிகையில் எழுதினார். பல வருடங்களாக அவரது கட்டுரைகள் வெளியாவதைப் போன்றே , எந்தவொரு ஆடம்பரமுமின்றி, தனது நீண்டகால நண்பரான வீரகத்தி தனபாலசிங்கத்தின் " பத்திரிகைத்துறையில் என் கதை" என்ற நூலுக்கு ஒரு விமர்சனத்தை அவர் எழுதியிருந்தார். அமைந்தது.

சில வாரங்களுக்கு முன்னர் ஜெயராஜ் எழுதிய அந்த விமர்சனம் பத்திரிகையில் வெளியான தினம் அவரது மரணம் சம்பவித்தது. அவரது மறைவு, இலங்கையின் தமிழ் ஊடகத் துறையில் அதன் ஒழுக்கம், நெறிமுறை சார்ந்த செயலூக்கம் மற்றும் பரந்துபட்ட தன்மை ஆகியவற்றில் ஒப்பிட முடியாத ஒரு மாபெரும் படைப்புலகின் முடிவைக் குறிக்கிறது.

பலராலும் "டி.பி.எஸ்" என்று அழைக்கப்படும் அவர், *1970*களின் பிற்பகுதியில் "வீரகேசரி" தமிழ் நாளிதழில் தனது ஊடகப் பயணத்தைத் தொடங்கினார். இலங்கை அதன் ஒரு தலைமுறையினரின் வாழ்க்கையைத் தீர்மானிக்கப் போகும் இன மோதலுக்குள் நுழையத் தொடங்கிய அதே காலகட்டத்தில் தான் இவருடைய பணியும் ஆரம்பித்தது.

*1980*களின் முற்பகுதியில் இருந்து இலங்கை ஆயுதப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டுப் போர் குறித்து, "தி ஐலண்ட்" (The Island), "தி ஹிந்து" (The Hindu) மற்றும் பின்னர் "பி.பி.சி. தமிழ் சேவை" ஆகியவற்றிற்கு விரிவான செய்திகளை அவர் வழங்கினார்.

அவர் களத்திற்கு மிக அருகாமையில் இருந்து, பரந்த தகவல் தொடர்புகளின் உதவியோடு, மிக உன்னிப்பான கள ஆய்வுகளுடன் செய்திகளைத் தந்தார். நம்பகத்தன்மை என்பது மிகவும் அரிதாகவும் ஆபத்தானதாகவும் இருந்த ஒரு சூழலில், அவரது எழுத்துக்களை நம்பகமானதாக மாற்றியது இந்த உழைப்பு தான்.

அந்த ஆபத்து ஒன்றும் சாதாரணமானது அல்ல. *1983* ஜூலையில் இலங்கையைக் உலுக்கிய தமிழர் எதிர்ப்பு இனக்கலவரம் (கறுப்பு ஜூலை), அவரது ஊடகக் குரலை வடிவமைத்தது. அப்போது நடந்த சம்பவங்களை அப்படியே பதிவு செய்யும் உறுதியுடன் அவர் செயற்பட்டார்..

*1987* அக்டோபரில், இந்திய இராஜதந்திர அழுத்தத்தின் காரணமாக இலங்கையின் குற்றப் புலனாய்வுத் துறையினரால் (சி.ஐ.டி.) அவர் கைது செய்யப்பட்டார். இது அவருக்கு தீவிரவாத அமைப்புகள் மீது இருந்த ஆதரவினால் அல்ல, மாறாக அதற்கு நேர் எதிரானது. உத்தியோகபூர்வ அரசாங்கத் தகவல்களுக்கு முரணாக இருந்த, விடுதலைப் புலிகளின் தலைவர் மாத்தையாவுடனான ஒரு நேர்காணலை அவர் வெளியிட்டதே அதற்குக் காரணம்.

கடுமையான பொது அழுத்தங்களுக்குப் பிறகே ஜெயராஜ் விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர் *1988* ஆண்டின் பிற்பகுதியில் புலமைப் பரிசில் பெற்று ஹாவார்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற அவர், இறுதியில் கனடாவில் குடியேறினார். அங்கிருந்தபடியே, பாதுகாப்பான தூரத்திலிருந்து இலங்கை குறித்த தனது அர்ப்பணிப்புடன் கூடிய எழுத்துப் பணியைத் தொய்வின்றி அவர் தொடர்ந்தார்.

புலம்பெயர்ந்து வாழ்ந்தபடியே, *1990*களின் நடுப்பகுதியில் "மஞ்சரி" என்ற சுதந்திரமான தமிழ் வார இதழைத் தொடங்கினார். அது இலங்கையின் அப்போதைய நிலைமைகளை எவ்வித ஒளிவுமறைவுமின்றி வெளிப்படையாகப் பதிவு செய்தது. கடுமையான தாக்குதல்களும், நிதி நெருக்கடிகளும் *1995* ஆம் ஆண்டில் அதனை மூடக் கட்டாயப்படுத்தின. இருப்பினும், அவர் தனது எழுத்தை நிறுத்தவில்லை.

இந்தியாவின் அரசியல் சூழல், தமிழ் மக்கள் கலாச்சாரம், அவற்றுக்கும் இலங்கைக்குமான அரசியல் வரலாறுகள் மற்றும் குடும்பப் பின்னணித் தொடர்புகள் குறித்தும் வாராந்த பத்திரிகைளைத் தொடர்ந்து எழுதினார். அவர் ஓய்வு பெறவில்லை தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ளவும் இல்லை. இறுதி மூச்சு வரை அவர் எழுதிக்கொண்டே இருந்தார்.


டி.பி.எஸ். அவர்களை அவரது சமகாலத்தவர்கள் பலரிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டியது, அவரது அசாத்தியமான துணிச்சல் மட்டுமல்ல, மாறாகத் தன் சொந்தச் சமூகத்தையே தவறிழைக்கும் போது பொறுப்புக் கூற வைக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய உறுதியும்தான். ஸ்ரீலங்கா அரசினாலோ அல்லது விடுதலைப் புலிகளாலோ இழைக்கப்பட்ட அனைத்துக் கொடூரங்களையும் அவர் ஒரே மாதிரியான தடயவியல் துல்லியத்தோடு (forensic precision) ஆவணப்படுத்தினார்.

அவர் "துரோகியாக முத்திரை குத்துதல்" (traitorisation) என்று தான் அழைத்த அந்தப் போக்கின் பின்னணியைக் கண்டறிந்து எழுதினார். அதனை ஒரு "கொடிய கொயபெல்சியப் பிரச்சாரச் செயல்முறை" (terrible Goebbelsian process) என்றும் அவர் வர்ணித்தார். அதாவது, எவ்வித ஆதாரங்களுமின்றி, வெறும் அரசியல் எதிரிகளைப் பிரச்சார பலத்தின் மூலமாகவே துரோகிகளாகப் பொய் முத்திரை குத்தும் ஒரு செயல்முறையே அதுவாகும்.

ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் காலம் தொட்டு, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் எழுச்சி ஊடாகவும், பின்னர் மாற்று அரசியல் பாதையை முன்வைத்த எவரையும் திட்டமிட்டு அழித்தொழித்த விடுதலைப் புலிகளின் காலம் வரையிலும் இச்செயல்முறை எவ்வாறு பரிணமித்தது என்பதை அவர் துல்லியமாகத் தேடிக் கண்டறிந்தார்.

அவரது மறைவுக்குப் பின்னர் பலராலும் பரவலாக மேற்கோள் காட்டப்படும் ஒரு பத்தியில், இந்த நகர்வை அவர் மிகத் தெளிவான நையாண்டியோடு இவ்வாறு வரைபடமாக்கிக் காட்டினார். "நாற்பதுகளில், "ஐம்பதுக்கு ஐம்பது" என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு தமிழனும் துரோகியாவான். சுதந்திரத்திற்குப் பின், சமஷ்டி (Federalism) ஆட்சிக் கோரிக்கையை நிராகரித்த எந்தவொரு தமிழனும் துரோகியாவான். அதன் பின்னர், தனித் தமிழீழத்தை எதிர்த்த எந்தவொரு தமிழனும் துரோகியானான். அதற்கும் பிறகு, ஆயுதப் போராட்டத்தைக் கண்டித்த எந்தவொரு தமிழனும் துரோகியானான்."

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



லயனல் போபகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆகச் சிறந்த குழந்தைகளை உருவாக்குவோம்!

வெ. இன்சுவை



நம் பேரக்குழந்தைகள், நம்மை விட அதிபுத்திசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுத்திறன் முந்தைய தலைமுறைகளைவிட எப்படி மாறுபட்டு உள்ளது என்பது இன்று உலக அளவில் விவாதிக்கப்படும் முக்கியமான ஒன்று. கடந்த இருபதாம் நூற்றாண்டு முழுவதும், ஒவ்வொரு புதிய தலைமுறைக்கும் சராசரி ஐ.க்யூ. புள்ளிகள் அதிகரித்துக்கொண்டே வந்தன. இதற்கு நல்ல ஊட்டச்சத்து, மேம்பட்ட கல்வி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவை காரணமாக கூறப்பட்டது. நம் காலத்தில், பள்ளிப் படிப்பைத் தவிர வேறு எதையும் கற்றுக் கொள்ள ஆர்வமோ, வசதியோ, வாய்ப்போ இருந்தது இல்லை. மதிப்பெண்களுக்காக பெற்றோர் நம்மை நெருக்கவில்லை. தேர்வுகள் நம்மை பயமுறுத்தியது இல்லை. நம் பெற்றோருக்கு எத்தகைய பதற்றமும் மன அழுத்தமும் இருந்தது இல்லை.

நாம் இயல்பாக நம் போக்கிலேயே வளர்ந்தோம். உணவு, உடை, கல்வி என எதற்கும் அவர்கள் அலட்டிக் கொண்டதில்லை. ஒரு வீட்டில் நான்கு அல்லது ஐந்து குழந்தைகள் இருந்த காரணத்தால் எந்த ஒரு குழந்தையின் மீதும் தனிப்பட்ட கவனமோ, கூடுதல் அக்கறையோ காட்டியதில்லை. கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்தோம். வசதி படைத்தவர்களின் வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே இசை, நடனம் என்று கற்றுக் கொண்டார்கள். அது குறித்து பிற பெற்றோர் அலட்டிக் கொண்டதில்லை பொறாமைப் பட்டதில்லை.

குழந்தை வளர்ப்பு சுமையாக இருந்தது இல்லை. தற்போது, குழந்தைகள் படிப்புடன் பல்வேறு கலைகளையும் கற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகளின் தொழில்நுட்ப அறிவும், கைப்பேசியை இவர்கள் கையாளும் திறனும், நமக்கு வியப்பைத் தருகிறது. இவர்கள் திரையை வேடிக்கை பார்க்கும் நுகர்வோராக இல்லாமல் அதைத் தங்கள் விருப்பப்படி இயக்கும் வல்லுநர்களாக மாறி விட்டார்கள். புதிய செயலிகளை தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்கிறார்கள். புதிய அறிதிறன் பேசியை எப்படி இயக்குவது என்பதை சில நிமிஷங்களில் கண்டறிந்து விடுகிறார்கள். சில குழந்தைகள் தாங்களே யூடியூபில் எதையாவது பதிவேற்றுகிறார்கள். தங்களுக்கென சேனல் கூட வைத்துள்ளார்கள்.

இரண்டு வயது குழந்தைகள்கூட யூடியூபில் தனக்குப் பிடித்த கார்ட்டூனை தேடி எடுத்துப் பார்க்கிறார்கள். எதை அழுத்த வேண்டும் என்று அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நாம் பேட்டர்ன் அல்லது பாஸ்வேர்ட் வைத்துக் கொண்டால்கூட அதைக் கூர்ந்து கவனித்து எடுத்து விட்டு விடுகிறார்கள். பள்ளிப் பாடத்திட்டங்களும் அவர்கள் வயதுக்கு அதிகம்தான் என்றாலும் படித்து விடுகிறார்கள். இக்கால ஐந்தாம் வகுப்பு குழந்தைக்கு அக்காலப் பட்டதாரிகளால் சொல்லிக் கொடுக்க முடியாது. அவ்வளவு கடினமாக இருக்கிறது.

பள்ளித் தேர்வுகளுக்கும் படித்துக் கொண்டு பல்வேறு கலைகளையும் கற்றுக்கொண்டு கைப்பேசியிலும் கேம்ஸ் விளையாடிக் கொண்டு சர்க்கஸ்காரர்கள் போல் பேலன்ஸ் பண்ணுகிறார்கள். இந்தப் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி முந்தைய தலைமுறைகளைவிட மிக வேகமாகவும் முற்றிலும் மாறுபட்ட பரிமாணத்திலும் உள்ளது. இத்தகைய சுட்டித்தனமும் கெட்டிக்காரத்தனமும் கொண்ட இந்த தலைமுறை குழந்தைகளை கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாள்வதைப்போல மிகவும் கவனத்துடன் கையாள வேண்டும்.

நாம் பெற்றோர்களுக்கு பயந்து வளர்ந்தோம். நமக்கு என்ன ஆசை?, என்ன விருப்பம்? என்பதையெல்லாம் பெற்றோர் தெரிந்து கொண்டதே இல்லை. நமக்கும் கேட்கத் தெரியவில்லை. அப்பா என்ற ஆளுமைக்குப் பயந்தே வாழப் பழக்கினாள் அம்மா. தற்போது பயமின்றி வளர்கிறார்கள். பெற்றோருடன் வாதாடுகிறார்கள் மறுத்துப் பேசுகிறார்கள் எதிர்க்கிறார்கள். காரணம், வீட்டுக்கு ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் மட்டுமே இருப்பதால் செல்லமும் கவனிப்பும் அதிகம். நாம் பத்து வயதில் அரசி யலைக் கண்டோமா? தேர்தலைக் கண்டோமா? இன்று இத்தனை விவரமாக இருக்கிறார்கள். இவர்களின் அபா ரமான ஆற்றல் தவறான அல்லது பயனற்ற வழிகளில் சிதற விடாமல் அதை நெறிப்படுத்தி ஆக்கபூர்வமான அறவழி யில் செலுத்தினால் ஆகச்சிறந்த ஒழுக்கமான அறிவார்ந்த சமூகம் உருவாகும்.

இந்தப் புத்திசாலி குழந்தைகளை, அறிவும் ஆற்றலும் மிகுந்த பிள்ளைகளை, வெட்டிக்கொண்டு வா என்றால் கட்டிக்கொண்டு வரக் கூடிய திறமை உள்ளவர்களை நாம்தான் நெறிப்படுத்தத் தவறி விடுகிறோம். கனிவையும், கண்டிப்பையும் சம அளவில் காட்ட வேண்டும். இடிப்பாரை இல்லாத மன்னனே கெடும் எனும் போது பிள்ளைகள் என்ன ஆவார்கள்? தேவையற்ற பிடிவாதங்களுக்குப் பணியக் கூடாது. "இல்லை" என்பதை, "முடியாது" என்பதை தாங்கிக்கொள்ள அவர்களைப் பழக்க வேண்டும்.

மறுப்பு சொல்லும்போது கொஞ்சம் அழுவார்கள் அழட்டும். கேட்டவுடன் கிடைத்து விட்டால் அதற்கு மதிப்பு இல்லை. ஒரு பொருளுக்காக ஏங்கி, தவித்து, அழுது, புலம்பி காத்திருக்கட்டும். அதன்பிறகு கிட்டும் பொருளின் மதிப்பை உணர்வார்கள். பணத்தின் அருமை தெரியாமல் வளர்கிறார்கள். நாம் அப்படி வளர்க்கிறோம். பணம் சம்பாதிப்பது எவ்வளவு கடினமான செயல் என்பதைப் புரிய வைக்க வேண்டும். ஒவ்வொரு காசிலும் பெற்றோரின் உழைப்பு இருக்கிறது என்பதை சொன்னால் வளர்ந்த குழந்தைகள் புரிந்து கொள்வார்கள்.

செல்லம் கொடுத்து அவர்களைக் கெடுக்காமல் எதையும் சரியான விகிதத்தில் கொடுக்க வேண்டும். பிறரை மதிப்பது, உதவி செய்வது போன்ற நற்பண்புகளை பெற்றோரிடம் இருந்து அவர்கள் கற்றுக் கொள்வார்கள். அதற்கான பிள்ளையார் சுழியை வீடுதான் முதலில் போட வேண்டும். ஒரு சிற்பத்தை செதுக்குபவர் வேண்டாத பகுதிகளை வெட்டி வெட்டி எறிவார். அதன்பிறகு கல்லுக்குள் ஒளிந்திருக்கும் சிற்பத்தை வெளிக்கொணர்வார். அதே போல நாமும் நம் குழந்தைகளிடம் உள்ள சின்னச்சின்ன வேண்டாத குணங்களைக் களைந்துவிட்டால் அவர்கள் ஆகச்சிறந்த குழந்தைகளாக மிளிர்வார்கள். (தினமணி)

# இந்தவார ராசிபலன் 07.06.2026 - 13.06.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 24
நல்ல நேரம்: 7.31 - 09.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : சப்தமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. நீண்ட நாள் கனவு விரைவில் நிறைவேறும். உங்களை சுற்றி இருப்பவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். வெளியிடங்களில் அனாவசிய பேச்சை குறைப்பது நன்மை தரும். குடும்ப விஷயங்களை பற்றி மற்றவர்களிடம் விவாதிக்காமல் இருப்பது சிறப்பு. வீடு மாற மாற வேண்டிய சூழல் இருக்கும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உடல் நலம் சீராகும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. மனதில் தெளிவு நிலை உண்டாகும். அடுத்தவர்களுக்காக பரிந்து பேசுவது போது கூடுதல் கவனம் தேவை. குடும்ப நலனில் அக்கறைகொள்ளவும். வெளியிடங்களில் வார்த்தைகளை குறைத்து பேசுவது நன்மையை தரும். கணவன், மனைவிக்கிடையே அன்யோன்யம் ஏற்படும். தெய்வ காரியங்களில் ஈடுபாடும் உண்டாகும். அண்டை வீட்டாரிடம் கவனமுடன் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் இழந்த செல்வாக்கை திரும்ப பெற முடியும். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. குடும்பத்தில் திருப்திகரமான சூழல் அமையும். பொருளாதார நிலை சீராக இருக்கும். கடுமையான முயற்சியால் எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்ய முடியும்.கணவன் மனைவி இருவரும் விட்டுக்கொடுத்து போவதின் மூலம் வரும் பிரச்சனைகளை தவிர்க்கலாம். இழுபறியாக இருந்த சில வழக்குகளில் சாதகமான தீர்ப்பு வரும். குடும்ப தேவைக்காக அதிக நேரம் செலவிட நேரிடும். உத்தியோக மாற்றம் ஏற்படும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. குடும்பத்தில் சில கசப்பான விஷயங்களை சகித்து கொள்ள வேண்டியிருக்கும். வாக்கு சாமர்த்தியம் உண்டாகும். நீங்கள் செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டை பெற முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். காரிய தடை விலகும். வீடு, வாகனம் போன்ற விஷயங்களில் செலவுகளும் விரயங்களும் ஏற்படும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்ப சூழ்நிலை மன அமைதியை தரும். பல நாட்களாக எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப நபர்களின் செயல்கள் நன்மை அளிக்கும். பொருளாதாரத்தில் நிலவிய பிரச்சனைகள் விலகும். உடல் ஆரோக்கியம் சீராகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம். தடைபட்ட காரியங்கள் தடையின்றி இனிதே நடைபெறும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற ஆரம்பிக்கும். பெற்றோர்கள் சொல் கேட்டு நடக்கவும். குடும்பத்தில் முக்கிய நிகழ்ச்சிகள் நடக்கும். உற்றார். உறவினர்கள் வருகையால் நன்மை உண்டாகும். முடிந்துபோன விஷயங்களை நினைத்து கவலைப்படுவதால் எந்த பயனும் இல்லை, இனி நடக்கவேண்டியதை செய்து முடியுங்கள் வெற்றி கிட்டும். நெருக்கடியான நேரத்தில் நண்பர்கள் கைகொடுப்பர். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பர்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி. குடும்ப வருமானம் போதிய அளவு இருந்தாலும் வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. முக்கிய வேலைகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.கணவன், மனைவிக்கிடையே விட்டுக்கொடுத்தல் அவசியம். கடன் வாங்கும் சூழ்நிலையை தவிர்க்கவும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நீண்ட நாட்களாக தடைபட்டு வந்து காரியம் விரைவில் முடியும். வியாபாரம் விருத்தியடையும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்ப பெருமையை உயர்த்த புது வழி கிடைக்கும். சமூக அந்தஸ்து வெகுவாக உயரும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். கோர்ட் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். குடும்பத்தில் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். வழக்கு விவகாரங்களை தள்ளிப்போடுவது நன்மை தரும். எந்த ஒரு பிரச்னையானாலும் சுமூகமாக கையாளவும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் விவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். கணவன் மனைவிக்கிடையே பனிப்போர் ஏற்படும். தேவையில்லாத விஷயங்களுக்கு கவலைப்படுவதால் மன சஞ்சலம் ஏற்படும். தெய்வ அனுகூலம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் எதிர்ப்புகள் அடங்கும். தொழில், வியாபாரம் செழிப்படையும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் ஏற்படும். புது நபர்களின் அறிமுகமும், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். கடன் வாங்கும் சூழல் தற்சமயம் ஏற்படாது. கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பெற்றோர்கள் வழியில் நன்மைகள் உண்டாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். ஆன்மிக ஈடுபாடு வரும். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் ஏற்படும். தொழில், வியாபாரம் பெரியளவில் பேசப்படும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, மற்றவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டியிருக்கும். பொது காரியங்களில் ஈடுபடும் வாய்ப்பு வரும். குடும்பத்தில் உங்கள கருத்துக்கு ஆதரவு பெருகும். கணவன், மனைவிக்கிடையே ஈகோ பிரச்னையை தவிர்க்கவும். வீண் விவாதங்களை தவிர்க்கவும். புது வீடு, வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். வாகனத்தில் செல்லும் போது மித வேகம் பின்பற்றவும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு கிடைக்கும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தின் பேராதரவை பெற முடியும். மனதில் துணிச்சல், தன்னம்பிக்கை அதிகரிக்கும். பொருளாதார நிலை திருப்தியளிக்கும். உடன்பிறந்தவர்கள் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். எதிரிகளின் பலம் அறிந்து செயல்படவும். கணவன் மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். நண்பர்கள் சிலர் விரோதமாக செயல்பட வாய்ப்புண்டு. எதிலும் நிதானமாக இருக்க வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பௌத்த மதத்துக்கு இலங்கையில் அச்சுறுத்தல் யாரால் ஏற்பட்டிருக்கிறது?



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையில் பௌத்த மதம் ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறது என்று சிங்கள அரசியல்வாதிகள் அவ்வப்போது கூறுவதைக் கேட்டிருக்கிறோம். அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி சிறுமியொருத்தியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டதை தொடர்ந்து சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அரச அமைப்புக்கள் அவரது விவகாரத்தைக் கையாண்ட முறை தொடர்பில் கடந்த மாதம் சர்ச்சை கிளம்பியதற்கு மத்தியிலும் அவ்வாறான அபாய அறிவிப்புக்கள் வெளியாகின.

கடும்போக்கு சிங்கள பௌத்த தேசியவாத அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கூட பௌத்த மதத்துக்கு ஆபத்து வந்திருப்பதாக கூறுகிறார்கள்.

அட்டமஸ்தானாதிபதி விவகாரத்தையடுத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையொன்றில் இலங்கையில் தற்போது பௌத்தம் பாரதூரமான சவால்களுக்கு முகங்கொடுப்பதாக எச்சரிக்கை செய்திருப்பதுடன் அதற்கான மூலவேர்க் காரணங்களை அடையாளம் கண்டு குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையிலான திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக மகா சங்கத்திற்குள் பரந்தளவிலான கலந்தாலோசனைகள் நடத்தப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்.

புத்த சாசனத்தை வலுப்படுத்துவதற்கு கடந்த காலத்தில் திரும்பத் திரும்ப முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் மகாசங்கத்திற்குள் இருக்கும் சில பிரிவுகளிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பின் விளைவாக முறியடிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருக்கும் திருமதி குமாரதுங்க இலங்கையின் பௌத்த குருமார் மத்தியில் விரிவான சீர்திருத்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் 'பௌத்த சங்காயனவை' (பௌத்த பேரவை) கூட்டுவதில் முன்னின்ற வழிகாட்டுமாறு மகாநாயக்கர்களை வலியுறுத்தியிருக்கிறார்.

அதேவேளை, பௌத்த சமூகத்துக்கும் முழு தேசத்துக்கும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்திய பல சம்பவங்கள் இடம் பெற்றிருக்கும் நிலையில், சமூகத்திற்குள் பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதால் பௌத்த மதத்தை பேணிப் பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற சபாநாயகருமான கரு ஜெயசூரிய கூறியிருக்கிறார்.

இவ்வாறாக, முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் தலைவர்களும் பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தங்களுக்கு இருக்கும் அக்கறையை வெளிப்படுத்தி கருத்துக்களை தெரிவித்திருந்தார்கள். மகாநாயக்க தேரர்கள் சொல்வதை கேள்வியின்றி பின்பற்ற வேண்டும் என்றும் கூட ராஜபக்ச கூறினார்.

இவர்களில் பலரும் இலங்கையில் பௌத்த மதத்துக்கு வெளியில் இருந்து ஆபத்து வருகிறது என்று பௌத்த சமூகத்துக்கு பீதியை ஏற்படுத்தும் வகையில் கதையாடல்களை முன்வைத்து வந்திருக்கின்ற போதிலும், கரு ஜெயசூரிய போன்ற சில தலைவர்கள்மாறுபட்ட கோணங்களில் பார்வையை செலுத்துகிறார்கள் என்பதை நிச்சயமாகக் குறிப்பிட்டாக வேண்டும்.

தீவிரவாதப் போக்குகளினாலும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுச் சீர்குலைவினாலும் தான் 'புத்தசாசனக்' கட்டமைப்புக்கு ஆபத்து உள்ளிருந்தே வருகிறது என்ற அபிப்பிராயத்தை அவர் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கிறார். பௌத்த துறவற அமைப்பிற்குள் இருக்கும் சில தனிநபர்கள் தங்களது சுயநலத்திற்காகவும் குற்றச் செயல்களுக்காகவும் அதனைத் துஷ்பிரயோகம் செய்வதே மிகப்பெரிய ஆபத்து என்று ஜெயசூரிய வாதிடுகிறார்.

பல்வேறு குற்றங்களுக்காக நீதிமன்றங்களினால் தண்டிக்கப்பட்டு பௌத்த மதத்தை அவமதித்த போதிலும், தொடர்ந்து காவி உடை அணிந்து தங்களைத் துறவிகளாகக் காட்டிக் கொள்ளும் நபர்கள் குறித்து பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து அவர் கவலையை வெளிப்படுத்திய பல சந்தர்ப்பங்கள் உண்டு.

துறவற ஆடை அணிந்து பௌத்தத்தை பல்வேறு வழிகளில் அவமதிக்கும் சில நபர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் கோடிக் கணக்கில் பணம் குவிந்து கிடப்பதாக பகிரங்கப்படுத்திய ஜெயசூரிய பௌத்த நிறுவனத்திற்குள் கடுமையான நிதி மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் இல்லாதிருப்பதையும் சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்.

ஆனால், பெரும்பாலான அரசியல்வாதிகள் பௌத்த பிக்குமாரில் ஒரு சாராரின் குற்றவியல் நடத்தைகளை சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாகப் பார்க்காமல் பௌத்தத்தின் இருப்புக்கு அச்சுறுத்தலை தோற்றுவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு சதித்திட்டத்தின் அங்கமாக பார்க்கும் மனநிலையைக் கொண்டிருக்கிறார்கள்.



**பெரும்பான்மைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் பொருளாதார நெருக்கடிகள், ஊழல் குற்றச்சாட்டுக்கள் அல்லது மக்கள் மத்தியில் தங்களது செல்வாக்கை இழக்கும் நிலையை எதிர்நோக்கும்போது மதத்துக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்பதைப் போன்ற தோற்றப்பாட்டை உருவாக்குவதன் மூலம் சிங்கள மக்களின் வாக்குகளை ஒரு குறிப்பிட்ட தலைவருக்குப் பின்னாலோ அல்லது அரசியல் அணிக்குப் பின்னாலோ ஒருங்கிணைக்க இந்த தந்திரோபாயம் பெரிதும் உதவியது.**

சட்டவிரோதமாகச் செயற்படும் பிக்குகளை பொதுவான குற்றவியல் சட்டத்தின் கீழ் பொறுப்புக்கூற வைப்பதற்கு அரசாங்கமோ அல்லது சிவில் சமூகமோ முயற்சிக்கும் போதெல்லாம் தேசியவாத அரசியல் சக்திகள் ஒரு பிக்குவை இலக்குவைப்பதை ஒட்டுமொத்த பௌத்த நிறுவனத்தின் மீதான தாக்குதலாகக் காண்பிப்பதற்கு முயற்சிக்கின்றன.

இதன் மூலமாக அந்த தனிநபரின் குற்றவியல் நடத்தை மறைக்கப்பட்டு அந்த சட்ட நடவடிக்கையை 'தேசவிரோத சக்திகள்", மேற்கத்தைய தொண்டு நிறுவனங்கள் அல்லது சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் சக்திகள் புத்த சாசனத்தை சீர்குலைக்கத் திட்டமிட்டு மேற்கொள்ளும் சதி முயற்சியாக சித்திரிக்கப்படுகிறது.

பௌத்த மதகுருமாரில் குறிப்பிட்ட சிலர் சமூகங்களுக்கு இடையில் குரோதத்தைத் தூண்டக்கூடியதாக வெறுப்புப் பேச்சுக்களில் ஈடுபடும்போதோ, சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிடும்போதோ அல்லது நாட்டின் பொதுச் சட்டங்களை மீறும்போதோ பிரதான அரசியல் தலைவர்கள் அவர்களை சட்டத்தை மீறுபவர்களாகப் பார்ப்பதில்லை. அவர்களை ஏதோ நாட்டையும் இனத்தையும் மதத்தையும் பாதுகாப்பதற்காக தங்களை அர்ப்பணித்தவர்களாக போற்றுவதன் காரணமாக மதகுருமார் மத்தியில் சட்டத்தை அவமதிக்கும் போக்கு அதிகரித்து வந்திருக்கிறது.

அரசியல் மேல்தட்டு வர்க்கம் தங்களின் தேர்தல் அங்கீகாரத்துக்கும் "தார்மீகத்" தகுதிக்கும் சமூகத்தை பெருமளவுக்கு சார்ந்திருப்பதால் பிரதான தலைவர்கள் தீவிரவாதப் போக்குடைய பல பிக்குகளுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்டத் தயங்குகின்றனர். மதகுருமாரின் தவறான நடத்தைகளை மெத்தனப்போக்குடன் அணுகுமாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளுக்கு நெருக்குதலை கொடுக்கிறார்கள்.

இனவாதத்தை தீவிரமாகத் தூண்டிய பிக்குகள் உயர்மட்ட அரசியல் அனுசரணையைப் பெற்றதும் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மதகுருமார்களுக்கு ஜனாதிபதிகளினால் பொது மன்னிப்பு வழக்கப்பட்டதும் இதற்கு முக்கியமான வரலாற்று உதாரணங்களாகும்.

இவற்றையெல்லாம் அடிப்டையாகக் கொண்டு பார்க்கும்போது இலங்கையில் பௌத்த மதத்துக்கு "ஆபத்து" ஏற்பட்டிருக்கிறது என்று முன்வைக்கப்படும் வாதம் ஒரு குறிப்பிட்ட அரசியல் நோக்கத்திற்காக அரசியல்வாதிகளினால் தொடர்ந்து பயன்படுத்தப்படும் ஒரு கருத்தாக்கமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

இந்த எச்சரிக்கை ஏன் அடிக்கடி விடுக்கப்படுகிறது என்பதையும் அது எவ்வாறு உண்மையான நிலைவரத்தில் இருந்து மாறுபடுகிறது என்பதையும் புரிந்து கொள்வதற்கு அதன் பின்னணியில் உள்ள புள்ளிவிபரங்கள், சட்டக் கட்டமைப்பு மற்றும் அரசியல் தந்திரோபாயங்களை ஆராய்வது அவசியமாகும்.

பௌத்தர்களின் சனத்தொகை குறைந்து வருவதாகவும் அவர்கள் ஒரு கட்டமைக்கப்பட்ட அச்சுறுத்தலை எதிர்கொள்வதாகவும் முன்வைக்கப்படும் வாதம் நாட்டின் உத்தியோகபூர்வ சனத்தொகைக் கணக்கெடுப்புத் தரவுகளுக்கு முற்றிலும் முரணானதாக இருக்கிறது. கடந்த ஒரு நூற்றாண்டில் இலங்கையின் ஒட்டு மொத்த சனத்தொகையிலும் சரி, எண்ணிக்கையிலும் சரி சிங்கள இனத்தவர்களினதும் பௌத்த மதத்தவர்களினதும் சதவீதம் சீராக வளர்ச்சியடைந்தே வந்திருக்கிறது.

1911 சனத்தொகைக் கணக்கெடுப்பின் பிரகாரம் பௌத்த மக்களின் தொகை சுமார் 60 சதவீதமாக இருந்தது. 2012 கணக்கெடுப்பில் பௌத்த மக்கள் தொகை நாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 70.2 சதவீதமாக உயர்ந்தது. தற்போது நாட்டின் சனத்தொகையில் பௌத்த மதத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் சிங்களவர்கள் சுமார் 74.9 சதவீதத்தினராக இருக்கின்றனர். எனவே இவர்கள் எண்ணிக்கையில் சுருங்கிவரும் ஒரு சிறுபான்மையினராக இல்லை. மாறாக, பலமான, நிலையான பெரும்பான்மைச் சமூகமாகவே விளங்குகிறார்கள்.

அடுத்தாக, சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் அரச நிறுவனங்களின் ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது, இலங்கையில் வேறு எந்த மதத்துக்கும் இல்லாத மிக உயரிய, முதன்மையான அங்கீகாரம் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது. "இலங்கை குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் போற்றி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்" என்று இலங்கை அரசியலமைப்பின் 9 வது அத்தியாயம் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

மக்கள் தொகையும் அரசியலமைப்புச் சட்டமும் பௌத்த மதத்திற்கு இவ்வளவு சாதகமாக இருக்கும் போது 'பௌத்தம் ஆபத்தில் உள்ளது' என்ற பிரசாரம் ஏன் இன்னமும் தொடருகிறது?

இலங்கையில் பௌத்தர்கள் தெளிவான பெரும்பான்மையினராக இருக்கின்ற போதிலும், சிங்கள பௌத்த தேசியவாதம் வரலாற்று ரீதியாக தன்னை ஒரு புவியியல் தனிமைப்படுத்தலுக்குள் வைத்தே சிந்தித்து வந்திருக்கிறது. பாக்கு நீரிணைக்கு அப்பால் ஏழு கோடிக்கும் அதிகமான தமிழர்களைக் கொண்டிருக்கும் இந்தியாவை நோக்குவதாலும் உலகளவில் இஸ்லாம் மதமும் கிறிஸ்தவ மதமும் பரந்தளவிலான செல்வாக்கைக் கொண்டிருப்பதாலும் தங்களைச் சுற்றி அச்சுறுத்தல்கள் இருப்பதாக பௌத்தர்கள் கருதுகின்றனர்.

இதன் காரணமாக உலக வரைபடத்தில் தேரவாத பௌத்தத்தைப் பாதுகாக்கும் ஒரு சிறிய, ஆபத்துக்குள்ளான தீவு தாங்கள் மாத்திரமே என்ற பிம்பத்தை தேசியவாதிகள் தீவிரமாகக் கட்டமைத்திருக்கிறார்கள். மக்களின் ஆழ்மனதில் பதிந்திருக்கும் இந்த அச்ச உணர்வை அரசியல்வாதிகள் தங்களுக்கு அனுகூலமான முறையில் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ற முறையில் அந்த 'அச்சுறுத்தலுக்கு' அவர்கள் வெவ்வேறு வடிவங்களைக் கொடுத்து வந்திருக்கிறார்கள்.

உள்நாட்டுப் போர்க் காலத்தில் தமிழ்ப் பிரிவினைவாதம் நாட்டின் ஒருமைப்பாட்டையும் 'பௌத்தத்தின் புனித பூமியின்" தூய்மையையும் சீர்குலைக்கப் பார்க்கிறது என்று இந்த அச்சுறுத்தல் சித்திரிக்கப்பட்டது. 2009 மே மாதத்தில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து பொதுபல சேனா போன்ற தீவிர

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுதந்திரத்தின் மிகப்பழைய வடுவைக் குணப்படுத்துதல்!



கலாநிதி ஜெகான் பெரேரா

இவ்வருட வெசாக் தினச் செய்திகளில், ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவும் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் இலங்கையின் எதிர்காலத்திற்கு இன்றியமையாத கூறுகளாக நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் நீதி ஆகியவற்றின் விழுமியங்களை முன்னிலைப் படுத்தியிருந்தனர். பௌத்தத்தின் போதனைகள் சமகால சமூகத்திற்கு ஆழமான பொருத்தமுடையவை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி திசநாயக்க, வெசாக் பண்டிகையை "அனைத்து சமூகங்களுக்கிடையிலும் பரஸ்பர புரிதல், ஒற்றுமை மற்றும் சகவாழ்வுக்கான" ஒரு அடையாளமாகவும், நல்லிணக்கத்தின் வடிவமாகவும் வர்ணித்தார்.

இதே போன்று, பிரதமர் ஹரிணி அமரசூரியவும் சாதி, இனம், மதம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு அனைவருக்கும் நீதி உறுதிசெய்யப்படும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அழைப்பு விடுத்தார். இச்செய்திகள் வெறும் மத ரீதியான விருப்பங்கள் மட்டுமல்ல, அவை இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றின் மிக மோசமான தோல்விகளுக்கு விடுக்கப்பட்ட நேரடி சவால்களுமாகும். மூன்று தசாப்த காலப் போர், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் தீர்வு ஒன்றை எட்ட முடியாமை ஆகியவை இந்த தோல்விகளில் அடங்கும்.

இலங்கை அதன் முழுமையான ஆற்றலையும் எட்டுவதை தடுத்து வரும் சவால்களாக இவை தொடர்ந்து நீடிக்கின்றன. இதனுடன், சமூகப் படிநிலையின் அடிமட்டத்தில் உள்ள சமூகங்களை தொடர்ந்து ஓரங்கட்டும் சமூக - பொருளாதார சமத்துவமின்மைகளின் நீடிப்பும் சேர்ந்துகொள்கிறது. இத்தகைய அநீதிக்கு மிக நீண்டகால உதாரணமாக விளங்குவது மலையகத் தமிழ் சமூகத்தின் அனுபவமாகும்.

ஆரம்பத்தில் அவர்கள் எதிர்கொண்ட இந்த புறக்கணிப்பின் அளவைத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியமானது. 1946 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மலையகத் தமிழ் சமூகத்தின் எண்ணிக்கை சுமார் 780,600 ஆக இருந்ததுடன், அது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 11.73 சதவீதமாக அமைந்தது. இதன் மூலமாக அவர்கள் நாட்டின் இரண்டாவது பெரிய இனச் சமூகமாக விளங்கினர். அக்காலத்தில் 733,700 அல்லது 11.02 சதவீதமாக இருந்த இலங்கைத் தமிழர் சமூகத்தை விடவும் எண்ணிக்கையில் அவர்கள் அதிகமாக இருந்தனர்.

மலையகத் தமிழ் சமூகத்திற்கு குடியுரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டமை, சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் ஓர் இன சிறுபான்மைச் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட முதலாவது பெரும் அநீதியாகும். இதன் விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தியதுடன் நீண்ட காலத்திற்கு நீடித்தன. பெருந்தோட்டங்களில் தங்களது உழைப்பின் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய ஒரு சமூகம், அரசியல் பங்கேற்பிலிருந்து விலக்கப்பட்டு, அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டது.

இது நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றின் மீது நீண்ட இருள் நிழல் படிந்த ஒரு அரசியல் மற்றும் தார்மீகத் தோல்வியாகும். அந்த அநீதிக்கான பொறுப்பு பரவலாகப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். இனப் பாகுபாடுகளைக் கடந்து அரசியல் தலைவர்கள் இதனை எதிர்த்து நிற்கத் தவறினர். இதன் விளைவாக, தேசிய வளம் மற்றும் செழிப்புக்கான பங்களிப்பு, தமக்குக் கிடைத்த அங்கீகாரத்தை விடப் பன்மடங்கு அதிகமாக இருந்த ஒரு சமூகம் ஓரங்கட்டப்பட்டது.

இன்று, கிட்டத்தட்ட எட்டு தசாப்தங்களுக்குப் பின்னர், இலங்கை அந்த வரலாற்றுத் தவறைத் திருத்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பைப் பெற்றுள்ளது. ஆனால், அது பொருளாதார சீர்திருத்தங்கள் உண்மையான சமூக உள்ளடக்கத்துடன் (அனைவரையும் உள்வாங்கும் தன்மையுடன்) இணையும்போது மட்டுமே சாத்தியமாகும்.

மலையகத் தமிழ் மக்களின் நீண்டகாலக் குறைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பலமுறை ஏற்றுக் கொண்டுள்ளது. தனது தேர்தல் அறிக்கையில், தோட்டப் புறங்களில் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல், காணி மற்றும் வீட்டு உரிமைகளை வலுப்படுத்துதல், கல்வி மற்றும் பொதுச் சேவைகள் சமமான முறையில் கிடைப்பதை உறுதி செய்தல், தோட்டச் சமூகங்களை தேசிய அபிவிருத்தியில் முழுமையாக ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுக்கு தேசிய மக்கள் சக்தி உறுதியளித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் 2023 ஆம் ஆண்டிற்கான நுவரெலியா பிரகடனமும் தோட்டச் சமூகம் பல தலைமுறைகளாகப் புறக்கணிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொண்டதுடன், வீட்டு வசதி, காணி உரிமை, உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளில் உள்ள அநீதிகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளுக்கும் உறுதியளித்தது.

இத்தகைய நடவடிக்கைகளின் தேவை மிகத் தெளிவாகத் தெரிகிறது. குடியுரிமைப் பிரச்சினைகள் காலப்போக்கில் பெருமளவில் தீர்க்கப்பட்ட போதிலும், பல தசாப்த காலப் புறக்கணிப்பின் சமூக-பொருளாதார விளைவுகள் இன்னும் ஆழமாக வேரூன்றி, தோட்டச் சமூகங்களின் அன்றாட வாழ்க்கையைத் தொடர்ந்து பாதிக்கின்றன.

மே 21 அன்று சர்வதேச தேயிலை தினத்தை முன்னிட்டு, சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு, இது போன்ற பல முக்கியப் பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்தது. பி. முத்துலிங்கம் தலைமையில் இயங்கும் இந்த அமைப்பு, கடந்த 35 வருடங்களாக மலையகத் தமிழ் மக்கள் சமூக மற்றும் பொருளாதார நீதியை அனுபவிக்கும் சம உரிமையுள்ள குடிமக்களாக வாழ்வதற்காகக் குரல் கொடுத்து வருகின்றது.



**வரலாற்று ரீதியான அநீதிகளைச் சரி செய்வது என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு வழங்கப்படும் சலுகையாகப் பார்க்கப்படக் கூடாது. அது தேசிய ஒற்றுமைக்கான ஒரு முதலீடாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், தாங்கள் அநீதி இழைத்தவர்களைத் தொடர்ந்து ஒதுக்கி வைப்பதன் மூலம் சமூகங்கள் பலமடைவதில்லை.**

பல தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினை, அவர்களின் குறைந்த வருமான மட்டமாகும். வேலையின் கடினத் தன்மையுடன் ஒப்பிடும்போது அவர்களின் நாளாந்த ஊதியம் நாட்டில் இன்னமும் மிகக் குறைவாகவே உள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் பல தலை முறைகளாக எவ்வித மாற்றமும் இல்லாத பாரம்பரிய முறைகளையே பெரிதும் நம்பியுள்ளனர்.

போட்டியிடும் ஏனைய தேயிலை உற்பத்தி நாடுகளுடன் ஒப்பிடும் போது, உற்பத்தித்திறன் குறைவாகவே உள்ளது - இதற்குத் தொழிலாளர்களின் திறமைக்குறைவு காரணமல்ல, மாறாக அவர்களின் நலன்புரி, திறன்கள் மற்றும் பொருளாதார நகர்வுத் தன்மை ஆகியவற்றில் நிலையான முதலீடுகள் வழங்கப்படாமையே காரணமாகும். இதன் விளைவாக, தொழிலாளர்கள் குறைந்த ஊதியம் மற்றும் வரையறுக்கப்பட்ட பொருளாதார நகர்வுத் தன்மை ஆகியவற்றின் சுழற்சிக்குள் தொடர்ந்து சிக்கியுள்ளனர்.

அவர்களின் வீட்டுவசதி நிலைமை இந்த சிரமங்களை மேலும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது. பல தோட்டக் குடும்பங்கள் இன்றும் தோட்ட நிறுவனங்களுக்கு அல்லது அரசுக்குச் சொந்தமான லயன் குடியிருப்புகளிலேயே தொடர்ந்து வாழ்கின்றனர். பாதுகாப்பான காணி - வீட்டு உரிமை இல்லாதது, சொத்துக்களைச் சேகரிப்பதற்கும் கடன்களைப் பெறுவதற்கும் அல்லது அவர்களின் எதிர்காலம் குறித்து சுயாதீனமான முடிவுகளை எடுப்பதற்குமான அவர்களின் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

"டித்வா" சூறாவளி தோட்டக் குடியிருப்புகளை சேதப்படுத்தியபோது, அங்கு வாழ்ந்த மக்கள் தங்களுக்குரிய வீடுகள் சொந்தமாக இல்லாததால், அரசாங்கத்தின் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலை அம்பலமானது.

இப்பிரச்சினைகள் மத்திய மலைநாட்டிற்கு அப்பாலும் நீடிக்கின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தனியார் தோட்டங்கள் மற்றும் சிறுதோட்டங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்களும் இவ்வாறான சவால்களையே எதிர் கொள்கின்றனர். அண்மையில் வெளியான சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை, தென்னிலங்கையில் உள்ள தனியார் தேயிலைத் தோட்டங்களில் வாழும் மலையகத் தமிழ் தொழிலாளர்களைப் பாதிக்கும் கடுமையான மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தியுள்ளது.

இவற்றில் ஊதியத்தைப் பிடித்து வைத்தல், கடன் சுமை, நடமாட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்ற, சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட 'கட்டாய உழைப்பு' என்பதைக் குறிக்கும் நடைமுறைகள் உள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தத் தரவுகள் ஏதோ ஒரு புறத்தில் நடப்பவை அல்ல. மலையகத் தமிழ் சமூகத்தின் முறையான புறக்கணிப்பு என்பது கடந்த காலத்தின் ஒரு எச்சம் அல்ல, மாறாக அது இன்றும் தொடரும் ஒரு தீவிரமான நிலை என்பதை இவை வெளிப்படுத்துகின்றன.

பொருளாதார ரீதியான பாதிப்பும் சமூக ரீதியான ஓரங்கட்டப்படுதலும் பல தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையான பாதுகாப்பையோ அல்லது நீதியைப் பெறுவதற்கான வாய்ப்பை இன்னும் வழங்காமல் தவிக்க விட்டுள்ளன. இந்த பின்னணியில்தான், அரசாங்கத்தின் சமீபத்திய தோட்டச் சீர்திருத்த முன்முயற்சி விசேட முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

பயன்படுத்தப்படாத தோட்டப்பகுதி நிலங்களையும் சொத்துக்களையும் முதலீடுகளுக்காக வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது. இதன் நோக்கம், போதிய செயல்திறனற்ற சொத்துக்களை வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய, முதலீடுகளை ஈர்க்கக்கூடிய மற்றும் பிராந்திய பொருளாதாரங்களுக்கு புத்துயிரூட்டக்கூடிய உற்பத்தித் திறன்மிக்க நிறுவனங்களாக மாற்றுவதாகும்.

இந்த வேலைத்திட்டம் தோட்டத்துறையை நவீனமயமாக்கவும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட தொழில்துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் முயல்கிறது. இந்த நோக்கங்கள் அவசியமானவையும் வரவேற்கத்தக்கவையுமாகும். இருப்பினும், பொருளாதார சீர்திருத்தம் மட்டுமே போதுமானதாக இருக்காது. இதற்கு இலங்கையின் சொந்த வரலாறே ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

தோட்ட நவீனமயமாக்கலின் முன்னைய கட்டங்கள், இத்தொழில்துறையின் மையமாக விளங்கும் மக்களின் கட்டமைப்பு ரீதியான அதிகாரமின்மைக்கு தீர்வு காணாமல், உற்பத்தித்திறன் ஆதாயங்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டன. இதன் விளைவாக, முதலீடுகள் செல்வத்தை உருவாக்கினவே தவிர, அதனை முறையாகப் பகிர்ந்தளிக்கவில்லை. செல்வத்தை உருவாக்கிய தொழிலாளர்கள் மீண்டும் ஒருமுறை பயனாளிகளாகக் கருதப்படாமல், வெறும் உழைப்பு உள்ளீடுகளாகவே நடத்தப்பட்டனர்.

தற்போதைய சீர்திருத்தமும் அதே தர்க்கத்தைப் பின்பற்றினால், அது அதே தோல்வியையே மீண்டும் உருவாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

சீர்திருத்தம் வெற்றியடைய வேண்டுமாயின், தோட்டத் தொழிலாளர்கள் வெறும் உழைப்பாளர்களாக மட்டுமன்றி, உரிமைகள், அபிலாசைகள் மற்றும் அபிவிருத்தியின் நன்மைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான நியாயமான கோரிக்கைகளைக் கொண்ட பங்குதாரர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும். வீட்டு உரிமை, பாதுகாப்பான நில உரிமை, தரமான கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்முனைவோர் வாய்ப்பு போன்றன ஆரம்பத்திலிருந்தே இச்சீர்திருத்தச் செயல்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டும்.

எனவே, மலையகத் தமிழ்ச் சமூகம் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள், இந்த சீர்திருத்தச் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்வாங்கப்பட வேண்டும். சர்ச்சைக்குரிய நில விவகாரம் குறித்து, அரசாங்கம் ஒரு சுதந்திரமான தேசிய நில ஆணைக்குழுவை நிறுவுவது பற்றி பரிசீலிக்க வேண்டும். இத்தகையதொரு அமைப்பில் மதிக்கப்படும் அரசாங்க அதிகாரிகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அனைத்து இன, மத சமூகங்களின் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

அது நிலக் கொள்கையை விரிவாக மறுபரிசீலனை செய்து, நில ஒதுக்கீடு மற்றும் பயன்பாட்டிற்கான வெளிப்படையான கொள்கைகளை உருவாக்க வேண்டும் அத்துடன் தீர்மானம் எடுப்பதில் நீதியை உறுதிசெய்து, சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான ஒரு நம்பகமான பொறிமுறையை வழங்க வேண்டும். ஒரு நம்பகமான நில ஆணைக் குழுவானது, நிலச் சீர்திருத்தங்கள் ஏதேனும் ஒரு குறிப் பிட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண ஆளுநர்களின் பொறுப்புடைமை ஜனாதிபதிக்கானதேயன்றி மக்களுக்கானதல்ல!



கந்தையா அருந்தவபாலன்

அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த ஏ.ஜி. அலெக்ராஜா ஒரு மாதத்துக்குள்ளேயே பதுளை மாவட்ட மேல்நீதிமன்றுக்கு இடமாற்றப்பட்டமை தொடர்பாக பல்வேறு தரப்புகளிடமிருந்தும் விமர்சனங்கள் எழுந்திருந்ததுடன் அதுதொடர்பாக யாழ் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தது. நீதிபதியின் இந்த இடமாற்றத்தின் பின்னால் வடமாகாண ஆளுநரும் அமைச்சர் பிமல் ரத்னாயகவும் இருந்ததாகவும் குறித்த இடமாற்றத்தை வலியுறுத்தி ஆளுநரால் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றும் அனுப்பப்பட்டதாகவும் அதனடிப்படையிலேயே அவ்விடமாற்றம் நிகழ்ந்ததாகவும் சிலதரப்புகளால் குற்றஞ்சாட்டப்பட்டும் இருந்தது. எனினும் அக்குற்றச்சாட்டை ஆளுநர் பணிமனை மறுத்து அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தது. இவற்றுள் எத்தரப்பு கூறுவது உண்மை என்பதற்கப்பால் ஆளுநர் அவ்வாறு செய்திருந்தால்கூட அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை என்பதே யதார்த்த நிலையாகும். ஏனெனில் ஆளுநர் ஒருவரின் விசுவாசமும் பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாடும் அவரை நியமனஞ்செய்த ஜனாதிபதிக்கேயன்றி மக்களுக்கானதல்ல என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

*1987 இல் இலங்கையின் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்திற்கமைய மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது என்பது அறிந்த ஒன்றே.* இதற்கமைய ஒவ்வொரு மாகாணத்துக்கும் மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களும் அவர்களிலிருந்து முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்களையும் கொண்ட சபை ஒன்று இருக்குமெனினும் முழுமையான நிறைவேற்று அதிகாரம் மக்களால் தெரிவுசெய்யப்படாதவரும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவருமான ஆளுநரிடமே இருக்கின்றது. ஆளுநருக்கு ஆலோசனை வழங்குவதே மாகாண அமைச்சர்களின் பொறுப்பு என்பதுடன் அவ்வாலோசனையைப் புறந்தள்ளி சுயமாக முடிவெடுக்கும் அதிகாரமும் ஆளுநருக்குண்டு. மாகாணசபை முறைமையிலுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான பிரதான பலவீனங்களில் இதுவும் ஒன்று. மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஆட்சியாளர்களின் எடுபிடிகளான ஆளுநர்களின் அதிகாரத்துக்குட்பட்டவர்களாக இருப்பது ஜனநாயகப்பண்புகளுக்கே முரணானதாகும்.

அரசியலமைப்பின் உறுப்புரை 154 (ஆ)2 ஆளுநரின் நியமனம் தொடர்பாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

'ஆளுநர், ஜனாதிபதியினால் அவரது கைப்பட்ட ஆவணம் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் 4(ஆ) என்ற உறுப்புரைக்கு இணங்க ஜனாதிபதிக்கு விரும்பியாங்கு பதவி வகித்தலும் வேண்டும்.'

அதேபோல மாகாண அமைச்சரவை பற்றி அரசியலமைப்பின் உறுப்புரைகள் 154 (ஊ)1 மற்றும்2 பின்வருமாறு கூறுகின்றன.

(1) ஒரு மாகாணத்தின் ஆளுநருக்கு அவரது பணிகளைப் பிரயோகிப்பதில் உதவிசெய்து ஆலோசனையளிப்பதற்கென ஒரு பிரதான அமைச்சரையும் நால்வருக்கு மேற்படாத வேறு அமைச்சர்களையும் கொண்ட அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) ஆளுநர் தற்றுணிபின்படி தேவைப்பட்ட கருமமா அல்லவா என்ற கேள்வி எழுமாயின் ஆளுநரின் முடிபே இறுதியாதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக எந்தவொரு நீதிமன்றிலும் கேளவிக்குட்படுத்த முடியாது.

மாகாணங்களுக்கான ஆளுநர் நியமனம் ஓர் அரசியல் நியமனம் ஆகும். அவரை ஜனாதிபதி தனது விருப்பத்திற்கேற்ப நியமிக்க முடியும். அந்நியமனத்துக்கான அடிப்படையான தகைமைகள் எவை என்றுகூட அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. ஜனாதிபதிக்கு வேண்டியவராக, விசுவாசமுடையவராக இருந்தால்போதும். அல்லது நியமனம் செய்த பின்னர் அவருக்கு விசுவாசமானவராகவும் அவரின் விருப்பத்திற்கேற்ப நடப்பவராகவும் இருந்தால் போதுமானது. அவ்வாறில்லாதுவிட்டால் அல்லது ஜனாதிபதி வேறொருவரை அப்பதவிக்கு நியமிக்க விரும்புமிடத்து குறித்த ஆளுநரை அப்பதவியிலிருந்து அகற்றவும் முடியும். ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் எனினும் அந்த எல்லை ஜனாதிபதியின் விருப்பத்தில் தங்கியிருக்கும். ஐந்தாண்டுகளுக்கு முன்னரும் ஒருவரை பதவியிலிருந்து அகற்றமுடியும் அல்லது அதன்பின்னரும் அவரை மீளநியமிக்க முடியும்.

> **ஆளுநர்களை வைத்து மத்தியின் அதிகாரங்களை இறுக்குவதுடன் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கட்சி அரசியல் செய்யும் இந்தமுறை தொடரவே செய்யும். அதுபோலவே ஆளுநர் மற்றும் அரசாங்கம் மீதான தமிழ்த்தரப்புகளின் விமர்சனங்களும் தொடரும். தமிழர்கள் நாம் மாறாதவரை இங்கு எதுவும் மாறப்போவதில்லை.**

வடக்கு மாகாணத்துக்கான ஆளுநர்களாக இதுவரை பத்துப்பேர் பதவி வகித்துள்ளனர். இவர்களில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள், ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரிகள் அடங்குவர். இவர்களுள் நால்வர் தமிழர் என்பதுடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து இப்பதவிக்குத் தமிழர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்குக்கான ஆளுநராக தமிழர்களை நியமிப்பதுகூட ஆட்சியாளரின் ஓர் அரசியல் தந்திரந்தான். தமிழ் மக்களிடையே எம்மவர் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை இலகுவாக அரங்கேற்றுவதே அவர்களின் அடிப்படை நோக்கமாகும். தமிழ் ஆளுநருடன் இலகுவாக தொடர்பாடல் செய்ய முடியும் என்பதற்கப்பால் பெரிதாக எதுவும் நிகழப்போவதில்லை. இம்மாகாணத்தில் எது செய்யவேண்டும் அல்லது எது செய்யக்கூடாது என்பதைத் தீமானிப்பது கொழும்பிலுள்ள ஆட்சியாளரும் அவர்களுக்குக் குடைபிடிக்கும் இங்குள்ள அவர்களின் எடுபிடிகளும் மட்டுமே. அவை எல்லாவற்றுக்கும் ஆமாம் போட்டுக் கொண்டு இருந்தால்மட்டுமே ஆளுநரால் அப்பதவியில் நீடிக்கமுடியும். ஒரு வகையில் இது பழக்கிய யானையைக் கொண்டு புதிய யானைகளைப் பிடிக்கும் உத்திபோன்றது. ஒப்பீட்டு ரீதியில் சில விடயங்களில் சிங்கள ஆளுநர்களால் நன்மையுண்டு. அவர்களால் நேரடியாக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடன் தொடர்புகொண்டு தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். ஆனால் தமிழ் ஆளுநர்க்களுக்கு அது மட்டுப்பாடானது. அதிலும் தற்போதைய ஆளுநர் இங்குள்ள அரசாங்கத்தின் முகவர்களை அதிகளவில் அனுசரித்துச் செல்லும் நிலையில் இருப்பதைக் காணமுடிகிறது.

ஆளுநர் நியமனம் மற்றும் அவருக்கான அதிகாரம், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட தற்போது வடக்கிலுள்ள அரசாங்கத்தின் முகவர்கள் என்பவற்றினை பின்புலமாகக் கொண்டே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மாகாணசபை தொடர்பான கொள்கை மற்றும் அணுகுமுறை என்பவற்றை நோக்கவேண்டும். தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடிக்குள் மறைந்திருக்கும் ஜே.வி.பி மாகாணசபை முறைமையை அகற்றவேண்டுமென்பதில் இன்றும் உறுதியாகவே உள்ளது. அதேவேளை அதனை அகற்றுவதால் உடனடியாக ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகள் தொடர்பிலும் அது அவதானமாக உள்ளது. எப்படித்தான் முயன்றாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சபைகளை தங்களால் கைப்பற்ற முடியாதென்பது தேசிய மக்கள் சக்தியினருக்கு நன்றாகவே தெரியும். அதுமட்டுமல்ல இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் ஏனைய மாகாண சபைகளைக் கைப்பற்றுவதுகூட தங்களுக்குப் பெரும் பிரயத்தனமாகவே இருக்கும் என்பதுவும் அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். அதனால் பெயரளவுக்கு மாகாணசபைகளும் இருக்கவேண்டும். ஆனால் அவற்றின் ஆளுகை எதிர்த்தரப்புகளின் கைகளுக்கும் சென்றுவிடக்கூடாது.

இதற்காக அரசாங்கத்தின் முன்னுள்ள ஒரேவழி மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்துவதை இழுத்தடித்துக்கொண்டு ஆளுநர் மற்றும் தமது கட்சி உறுப்பினர்களின் மூலம் அதிகாரங்களைப் பிரயோகிப்பதும் அரசியல் செய்வதுமாகும். இதனையே இன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கச்சிதமாகச் செய்து வருகிறது. தெற்கைப் பொறுத்தவரை எதிர்க்கட்சிகளுக்கே மாகாணசபைத் தேர்தல் அவசியப்படுகிறதேயன்றி மக்கள் அதைப்பற்றி அதிகளவு ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில் சிங்கள மக்களைப் பொறுத்தளவில் மாகாணசபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையில் பெரியவேறுபாடில்லை. அவை மோதகமும் கொழுக்கட்டையும் போலத்தான். ஆனால் வடக்கு கிழக்கு அப்படியல்ல. இங்கு அரசியல்வாதிகள் மட்டுமன்றி பெரும்பான்மையான மக்களும் மாகாணசபைகளுக்கான தேர்தலை விரும்புகிறார்கள். எனினும் தேர்தலை நடத்தி வடக்கு கிழக்கில் தமது கட்சி அரசியலைப் பலவீனப்படுத்தவும், இலங்கைத் (சிங்களத்) தேசியத்துள் தமிழர்களைக் கரைக்கும் தங்கள் முயற்சிக்குத் தாங்களாகவே முட்டுக்கட்டை போடுவதற்கும் தோழர்கள் ஒன்றும் அரசியல் கற்றுக்குட்டிகளல்லனரே. அதேவேளை தமிழ் மக்களிடத்து தாங்கள் வித்தியாசமானவர்கள் என்று காட்டிய போலி முகத்திரையும் கலைந்துவிடக்கூடாது என்பதிலும் அவர்கள் கவனமாக உள்ளனர். அதற்காகவே வராத தேர்தலை வரப்போகிறது என்று காட்டுவதற்காகத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கான குழுக்கூட்டங்களும், எல்லை மறுசீரமைப்பு முயற்சிகளும், தேர்தலுக்கான நிதிதொடர்பான கட்டுக்கதைகளும் தாராளமாக அவிழ்த்துவிடப்படுகின்றன.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாணசபை இயங்கவில்லை என்றால் ஆளுநருக்கான பணிகளும் பாதிக்குமேல் இல்லாமல் போய்விடும். தற்போதைய அரச இயந்திரத்தை இயக்குவதற்கு அரச அதிபர்களே போதும் ஆளுநரே தேவையில்லை. இந்த நிலையில் ஆளுநர் அரசாங்கத்துக்காக அரசியல் செய்யவே முடியும். அதனையே தற்போதைய ஆளுநரும் மறைமுகமாகச் செய்து வருகிறார். வழமையாக நடக்கும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு விழாவெடுப்பது, அங்கே அரசாங்கத்தை புகழ்வது, முன்னைய அரசாங்கங்களை விட இந்த அரசாங்கம் மேலானது எனச் சத்தியம் செய்வது, வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் அரசாங்கத்துக்கான நன்னடத்தைச் சான்றிதழ் வழங்குவது போன்றவற்றுடன் வடக்கில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கான தடைகளை அகற்றுதல் போன்றவையே தற்போது ஆளுநரின் முதன்மைப் பணிகளாகும். இதனைப் புரிந்துகொண்டால் நீதிபதியை இடமாற்றுவதற்கு ஆளுநர் கடிதம் எழுதிவிட்டார் என்று நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

மாகாணசபைகள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கான ஒரு முறைமையாக இருக்கவேண்டுமெனில் அது தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் பலமாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதுடன் அதனைச் சுதந்திரமாக இயங்குவதற்கும் அனுமதிக்கப்படவேண்டும். ஏற்படுத்தப்படவேண்டிய முக்கிய மாற்றங்களுள் ஆளுநரின் அதிகாரங்களும் அடங்கும். மாகாணசபைகளுக்கும் மத்திக்கும் இடையில் ஒரு ஒருங்கிணைப்பாளராக மட்டுமே ஆளுநர் இருக்கவேண்டியதுடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையினர்க்கே மாகாணம் தொடர்பான முழு நிறைவேற்றதிகாரமும் இருக்கவேண்டும். இந்த மாற்றங்கள் மாகாணசபைகளை அகற்றவேண்டும் என்ற மறைமுக நிகழ்ச்சி நிரலின்கீழ் செயற்பட்டுவரும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் இருந்து மட்டுமன்றி வேறு எந்த அரசாங்கத்திடமும்கூட நாம் எதிர்பார்க்க முடியாது. அதனால் ஆளுநர்களை வைத்து மத்தியின் அதிகாரங்களை இறுக்குவதுடன் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கட்சி அரசியல் செய்யும் இந்தமுறை தொடரவே செய்யும். அதுபோலவே ஆளுநர் மற்றும் அரசாங்கம் மீதான தமிழ்த்தரப்புகளின் விமர்சனங்களும் தொடரும். தமிழர்கள் நாம் மாறாதவரை இங்கு எதுவும் மாறப்போவதில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் என்னும் அழகான கற்பனை



-யதீந்திரா

விடுதலைப் புலிகள் அமைப்பின் பாடல்களை பாடி, அவற்றை சமூக ஊடகங்களில் பதிவேற்றிய குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒரு இளைஞர், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவரை விடுவிக்குமாறு கூறி வழமைபோல் சில அரசியல்வாதிகளும், சிவில் சமூகக் குழுக்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். கண்டணங்களை வெளியிட்டுவருகின்றனர். தமிழர் அரசியலில் இவ்வாறான நிகழ்வுகள் அவ்வப்போது நடப்பதும் பின்னர் அனைத்தும் சதாரணமாகவிடுவதும் வழமையானது.

விடுதலைப் புலிகள் இயக்கமானது, இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும். 1998 இல் இந்த தடை நடைமுறைக்கு வந்தது. பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைக்காக 2002 இல் தடை நீக்கப்பட்டது. பின்னர் மீண்டும் 2009 இல் தடை புதுப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றிற்கு ஆதரவாக அல்லது அந்த அமைப்பின் சிந்தனைகளை பரவல்படுத்த முற்பட்டால், அவர்களை கைது செய்யும் அதிகாரத்தை இலங்கை அரசு கொண்டிருக்கின்றது. இதனை புரிந்து கொள்வதில் ஒரு சிரமமும் இருக்க வேண்டியதில்லை. இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

2009இல் விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாக அழிக்கப்பட்ட பின்னர், அதற்கு புத்துயிரளிக்க முற்படுவதான குற்றச்சாட்டின் கீழ்தான் இவ்வாறான கைதுகள் இடம்பெறுகின்றன. இந்தியாவிலும் அவ்வாறான சில கைதுகள் இடம்பெற்றிருக்கின்றன. கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களாக இருக்கின்ற போது, உடனடியாகவே அவர்கள் விடுதலைப் புலிகளை மீள்கட்டமைக்க முற்பட்டதாகவே குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்படுகின்றன. உண்மையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எவரும் புத்துயிரளிக்க முடியாது. இது இலங்கை அரசும் அறியாத ஒன்றல்ல. ஏன் இந்திய அரசுக்கும் இது நன்கு தெரிந்த சங்கதி. விடுதலைப் புலிகள் பற்றி பல ஆங்கில நூல்களை எழுதியிருக்கும் இந்திய பத்திரிகையாளர் நாராயணசுவாமி, கொழும்பு ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருக்கும் ஒரு கருத்து முற்றிலும் சரியானது. அதாவது, இலங்கையில் ஒரு வேளை புத்தர் மீண்டும் வரும் ஆச்சரியம் நிகழ்ந்தாலும் கூட, விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் உருவாகும் ஆச்சரியம் ஒரு போதும் நிகழாது.

**கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களாக இருக்கின்ற போது, உடனடியாகவே அவர்கள் விடுதலைப் புலிகளை மீள்கட்டமைக்க முற்பட்டதாகவே குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்படுகின்றன. உண்மையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எவரும் புத்துயிரளிக்க முடியாது. இது இலங்கை அரசும் அறியாத ஒன்றல்ல. ஏன் இந்திய அரசுக்கும் இது நன்கு தெரிந்த சங்கதி.**

ஏன் அப்படி? விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது ஒரு தனி மனிதரின் சிந்தனை மற்றும் விருப்பு வெறுப்புக்களால் கட்டியெழுப்பட்ட இயக்கம். அவர் இல்லை என்றால் இயக்கம் இல்லை. அவரோடு உடன்பட்டவர்கள் மட்டுமே அந்த இயக்கத்தின் உறுப்பினராக இருந்தார்கள் - அவர்கள்தான் இருக்கவும் முடியும். விடுதலைப் புலிகள் அமைப்பை நன்கு அறிந்தவர்கள், இதனை நன்கறிவார்கள். அவ்வாறான பலர் இப்போதும், அனைத்தையும் வாசித்தவாறு வெளிநாடுகளில் அமைதியாக வாழ்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவராக இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரனின் மறைவுடன்தான், யுத்த வெற்றியை இலங்கை அரசு பிரகடணம் செய்தது. அத்துடன் அனைத்தும் முடிந்துவிட்டது. அதன் பின்னரான கடந்த பதினேழு ஆண்டுகள் என்பது பிரபாகரன் என்னும் அடையாளத்தை மேலும் சிதைக்கும் காலமாகவே கடந்திருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் பார்த்தால் விடுதலைப் புலிகளின் காலத்து பாடல்களை பாடுவது, அவற்றை ரப் வகை பாடல்களாக பாடுவது அல்லது விடுதலைப் புலிகளை முதன்மைப்படுத்தி புதிய பாடல்களை ஆக்குவது போன்ற விடயங்கள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. அதே வேளை, சில இளைஞர்கள் மதுபாணம் அருந்தும் போது, மேலதிக உற்சாகத்திற்காக விடுதலைப் புலிகளின் பாடல்களை தங்கள் ஸ்மார்ட் தொலைபேசிகளில் ஒலிக்கச் செய்து மகிழும் போக்குமுண்டு. அதே போன்று தேர்தல் பிரச்சாரங்களின் போது இளைஞர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் இவ்வாறான பாடல்கள் ஒலிக்கப்படுகின்றன.

இவை அடிப்படையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான ஈடுபாட்டினாலோ அல்லது ஆர்வத்தினாலோ இடம்பெறும் விடயங்கள் அல்ல - மாறாக, இது உற்சாகத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் நாட்டு சினிமா துள்ளிசைப் பாடல்களுக்கு பதிலாக, விடுதலைப் புலிகளின் பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. விடுதலைப் புலிகளின் பாடல்கள் இசையின் மகத்துவத்தை உணர்த்த ஆக்கப்பட்டவை அல்ல - மாறாக, அவைகள் அடிப்படையில் பிரசார நோக்கங்களுக்காகவே ஆக்கப்பட்டவை. யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் மீதான நம்பிக்கையை பலப்படுத்தும் நோக்கிலேயே இந்தப் பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. சமாதான ஒப்பந்த காலத்தில்தான் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த மக்கள், இந்தப் பாடல்களை முதல் முதலாக கேட்டனர். அன்றைய சூழலில் இவ்வாறான பாடல்கள் விடுதலைப் புலிகளின் பிரச்சாரங்களுக்கு பெரிதும் உதவியது உண்மைதான். ஆனாலும் அதற்கும் ஒரு மட்டுப்பாடு இருந்தது. இவ்வாறான பிரச்சாரங்கள் இருந்த போதும் கூட, இறுதி யுத்தத்தின் போது, கட்டாய ஆட்சேர்ப்பில்தானே புலிகள் ஈடுபட நேர்ந்தது. விடுதலைப் புலிகள் வெற்றியின் உச்சத்தில் இருந்த போது மட்டும்தான், அவர்களின் அனைத்தும் மக்களால் ரசிக்கப்பட்டது ஆனால் புலிகள் தோல்வியை நோக்கி சரிந்த போது, மக்கள் புலிகளின் பகுதியிலிருந்து தப்பித்துக் கொள்ளவே முயற்சித்தனர். அப்போது அவர்களை எந்தப் பாடலும் ஆட்கொள்ளவில்லை. இன்று அரசியல் ஆய்வாளர்களாக, கவிஞர்களாக வலம்வரும் சிலர், அவ்வாறு தப்பித்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்றவர்கள்தான். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது போல், விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியோடு, அவர்களுக்குள் இருந்த விடுதலை நெருப்பும் அணைந்துவிட்டது.



இந்த அடிப்படையில் நோக்கினால் விடுதலைப் புலிகள் பாடல் வரிகள் இப்போது துள்ளிசை கஞைர்களின் காசு பார்க்கும் ஆசைக்கான வரிகள் மட்டும்தான். தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் குறித்த இளைஞரும் அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தப் பாடல் வரிகளை பயன்படுத்தியிருக்கின்றார். இது சாதாரணமாக கடந்து செல்லும் விடயங்கள்தான் ஆனால் இலங்கை அரசு அவ்வாறு கடந்து செல்ல முயற்சிக்கவில்லை, தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் கருத்துக்கள், சின்னங்களை பயன்படுத்தினால் குற்றம் என்னும் அடிப்படையில் மட்டும்தான் இந்த விடயங்களை பார்க்கின்றது.

ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்தில் இருக்கின்ற நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் இந்த அரசாங்கம் தமிழ் மக்கள் ஏமாற்றிவிட்டது என்றவாறு பேசிவருவதையும் காண முடிகின்றது. ஏழு தசாப்த கால அரசியல் அனுபவங்களுக்கு பின்னரும் கூட - ஒரு அரசுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடு தெரியவில்லை என்றால் - உங்களை எண்ணி பரிதாப்படலாம். அரசு ஒரு கட்டமைப்பு. அதன் பணிகள் நிறுத்தப்படுவதில்லை. ஒரு பெரும் அரசியல் புயல் ஏற்படும் போதுதான் அரச கட்டமைப்பில் உடைவுகள் ஏற்படும் - மற்றும்படி, அரசு எப்போதும் அரசுதான். அது நிரந்தரமானது. ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அல்ல - எவர் கதிரையில் இருந்தாலும் அரசின் பணிகள் முன்னையவற்றின் தொடர்சியாகவே இருக்கும்.

ஆனால் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் எவர் மீதாவது குற்றச்சாட்ட வேண்டும் என்றால், முதலில் குற்றச்சாட்டுக்குரிவர்கள் தேசிய மக்கள் சக்தி சார்பில் வடக்கு கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான். மக்கள் எதற்காக பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றனர்? தங்களின் பிரச்னைகளை அரசாங்கத்தின் உரிய மட்டத்திற்கு கொண்டு சென்று, அதன் ஊடாக மாற்றங்களை ஏற்படுத்துவதுதானே, குறித்த பிரதிநிதிகளின் கடப்பாடு. ஆனால் அதனை குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்கின்றனரா? இத்தனைக்கும் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சராகவும் இருக்கின்றார். அரசாங்கத்தின் கொள்கை சார் முடிவுகளில் அவர் தலையிடும் ஆற்றலை கொண்டிருக்க வேண்டும் - முடியாவிட்டால் அவ்வாறான பதவியில் ஒரு தமிழர் இருக்கின்றார் என்று கூறுவதில் எவ்வித பெருமையும் இல்லை.

ஜே.வி.பியோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ - எவர் ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள், அவர்களால் ஒரு எல்லைக்கு மேல் வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் சூழலை புரிந்து கொள்ள முடியாது. அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பிசாசு என்பது போன்றுதான் அவர்கள் விடயங்களை பார்ப்பார்கள். அவர்களுடைய பார்வையிலுள்ள குளறுபடிகளை சுட்டிக்காட்டி, நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்த பாடுபட வேண்டியதுதான் அரசாங்கத்தில் இருக்கும் தமிழ் பிரதிநிதிகளின் கடமையும் பணியும் ஆகும் - ஆனால் அது நிகழவில்லை.

அதே வேளை தமிழ் அரசியல்வாதிகளும் இவ்வாறான அரசியல் துருப்புச் சீட்டுக்களுக்காக காத்துக் கொண்டிருக்கும் மனோபாவத்தை விடுத்து, இவ்வாறான விடயங்கள் தவறு என்பதையும் இளைஞர்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டும். குறித்த இளைஞரின் விடுதலையை வலியுறுத்தும் அதே வேளை, இவ்வாறான விடயங்களில் இளைஞர்கள் ஈடுபடக் கூடாது, அதனை மீறி ஈடுபட்டால் இவ்வாறான, ஆபத்து மீண்டும் நேரிடும் என்னும் எச்சரிக்கையை வழங்க வேண்டும். அரசை பொறுத்தவரையில் இவ்வாறான வீதியோர சத்தங்கள், காட்போட் சண்டித்தனங்களுக்கு இறங்கி வரப் போவதில்லை. அரசு நிரந்தரமானது. அது தனிநபர்களில் தங்கியிருக்கும் ஒன்றல்ல ஆனால் தமிழ் மக்கள் அடிப்படியல்ல. உனடியாக சத்தம் போடுபவர் ஒய்ந்தவுடன், குறித்த இளைஞனின் குடும்பம் மட்டுமே எஞ்சியிருக்கும். நல்ல அரசியல் தலைவர்கள் என்பவர்கள், மக்களின் உணர்ச்சிக்கு தீனி போடுபவர்கள் அல்லர் - மாறாக, அவர்களை வழிநடத்த வேண்டியவர்கள். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# பொலித்தீன் பை:
# ஒரு நாள் போத்தல் சுத்தமான கழிப்பறை

**பொலித்தீன் பாவனையைத் தடுப்பதாகக் கருதிக் கொண்டுகாசு இல்லாமல் கொடுக்கப்பட்டபொலித்தீன் பைக்கு இப்பொழுது காசு வாங்குகிறார்கள். மாறாக பொலித்தீனுக்குப் பதிலாகவேறு சூழல் நேய பை ஒன்றுக்கு காசை வாங்கலாமே? பொருட்களை சூழலுக்கு நேசமான பைகளில் பொதிசெய்து கொடுக்கவேண்டிய பொறுப்பு பேரங்காடிகளுக்கு இல்லையா? பொலித்தீன் பைக்கு காசைக் கொடுக்கும் மக்கள் அந்தப் புதிய பைக்கும் காசு கொடுப்பார்கள்.**



நிலாந்தன்

அரசாங்கம் ஒருநாள் பாவித்துவிட்டு பின் கழித்துவிடும் பிளாஸ்டிக் தண்ணீர்ப் போத்தல்களைத் தடைசெய்திருக்கிறது. நாட்டில் ஒவ்வொரு நாளும் 10 லட்சம் தண்ணீர் போத்தல்கள் பாவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் 20 லட்சம் "லன்ச் சீற்கள்" பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொருநாளும் 40 லட்சம் பொலித்தீன் பைகள் கழிக்கப்படுகின்றன் புதைக்கப்படுகின்றன. நாடு, ஒவ்வொருநாளும் கிட்டத்தட்ட 940 மெட்ரிக் தொன் பிளாஸ்டிக்கைகழித்துவிடுகிறது.

எனவே ஒருநாள் பிளாஸ்டிக் போத்தலைத் தடைசெய்ய வேண்டும். ஒருநாள் தண்ணீர் போத்தல் என்பது முதலாவதாக சூழலுக்குமாசு.இரண்டாவதாக நீர் விரையம். பொது வைபவங்களில் கொடுக்கப்படும் தண்ணீர் போத்தலை முழுமையாக குடித்து முடிப்பவர்கள் எத்தனை பேர்? பெரும்பாலானவர்கள் கொஞ்சம் மிச்சம் வைப்பார்கள். அந்தப் போத்தலில் இருக்கும் மிச்சத்தை மற்றவர்கள் குடிக்கமாட்டார்கள். ஒரு பொதுவைபவத்தில் இவ்வாறு எத்தனை லீட்டர் நீர் விரயமாகிறது?

இதில் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பின்மை உண்டு. தான் குடித்த நீரை மற்றவர்கள் குடிக்கமாட்டார்கள் என்று நன்குதெரிந்து கொண்ட பின்னரும் அதைமிச்சம் விடும் கூட்டுப் பொறுப்பின்மை. ஒன்றில் அதைக் குடித்து முடிக்கவேண்டும். அல்லது அதை மிச்சத் தண்ணீரோடு வீட்டுக்கு எடுத்துச்செல்ல வேண்டும். குடித்தகுறையை அப்படியே விட்டுச் செல்வது எல்லா விதத்திலும் கூட்டுப் பொறுப்பின்மை தான். அந்த நீருக்கு விலை உண்டு. அதை விநியோகிக்கும் அந்த பொதுமண்டபம் அல்லது அந்தப் பொது நிகழ்வை ஒழுங்குபடுத்தும் அமைப்பு அந்த நீரை விலை கொடுத்துத்தான் வாங்குகிறது. விலை கொடுத்து வாங்கிய நீரை வீணாகச் சிந்தும் ஒரு பண்பாடு. எனவேஒருநாள் தண்ணீர் போத்தலைநிறுத்தவேண்டும்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், அதற்கு மாற்றீடு என்ன என்பது தான். சிறிய கண்ணாடிக் குவளைகளை பயன்படுத்தலாம்.அல்லதுபேப்பர் குவளைகளைப் பயன்படுத்தலாம். நீரை ஏந்துவதற்கு பொதுவான ஓர் ஏற்பாடு இருந்தால், குவளைகள் பிளாஸ்டிக் போத்தலை பிரதியீடுசெய்யும்.

இங்கு தடைசெய்வதை விடவும் முக்கியமானது, மாற்று ஏற்பாடு என்ன என்பதனை ஒரு பண்பாடாகக் கட்டி எழுப்புவது தான். பிளாஸ்டிக் பாவனை, பொலித்தீன் பாவனைபோன்றன ஒரு பண்பாடு. அது மிகவும் லாபகரமான, நன்கு ஸ்தாபிக்கப்பட்ட உலகளாவிய ஒரு கோப்பரேட் பண்பாடு. அப்படித்தான் பொலித்தீனுக்கு எதிரானபாவனையும் ஒருபண்பாடாகக் கட்டி எழுப்பப்படவேண்டும். அதைச் சட்டத்தால் மட்டும் கட்டியெழுப்பமுடியாது.

அரசாங்கம் ஏற்கனவே ஆட்சிக்கு வந்த கையோடு பொலித்தீன் பாவனையைத் தடைசெய்தது. மக்கள் பொலித்தீன் பைகளுக்கு விலைகொடுத்து வாங்க வேண்டும் என்றுஅறிவித்தது.ஆனால் நடைமுறையில் என்ன நடந்தது?

அரசாங்கம் பொலித்தீன் பாவனையை நிறுத்துமாறு அறிவித்து பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் பொலித்தீன் பாவனை நிறுத்தப்படவில்லை. பதிலாக பெரு முதலாளிகளும் பேரங்காடிகளும் பொலித்தீன் பைகளை காசுக்குவிக்கும் ஒரு நிலைமைதான் உருவாகியிருக்கிறது.

சாதாரணமாக,மீன் வாங்கப்போனால் வெறுங்கையில் மீனைவாங்கிக் கொண்டுவர முடியாது.கடலுணவுகள், மாமிசம், மரக்கறி, பழங்கள்அனைத்திற்கும் இது பொருந்தும். முன்னைய காலங்களில் உள்ளூர்க் கடைகளில் பாண் வாங்கினால் ஒருபேப்பரால் சுற்றித்தான் தருவார்கள். மாமிசத்தை மாட்டுத்தாள் பேப்பரால் சுற்றிப் பின்னர் பையில் போடுவார்கள். அரசாங்கம் பொலிதீனுக்குத் தடைவிதித்த பின்னரும் மாமிசக் கடைகளிலும் கடலுணவுக் கடைகளிலும் மரக்கறிச் சந்தைகளிலும் உள்ளூர்க் கடைகளிலும் வழமைபோல பொலித்தீன் பிரயோகத்தில் உண்டு. ஆனால் அந்தப் பைகளுக்கு அங்கே காசு கேட்பதில்லை.

அதேசமயம்,பேரங்காடிகளிலும் பெருவணிக வளாகங்களிலும் பொருட்களுக்கு ரசீது போட்ட பின் "ஷொப்பிங் பாக்குக்கும்" ரசீது போடவா என்று கேட்கிறார்கள். அரசாங்கம் பொலித்தின் பாவனையை நிறுத்தப் போவதாக அறிவித்தவுடன் சில நவீன பேக்கரிகளில் பாண் வாங்கினால் ஷொப்பிங் பாக்கிற்கும் பில் போடட்டுமா என்று கேட்டார்கள்.ஷொப்பிங் பாக் இல்லை என்றால் எப்படித் தருவீர்கள் என்று கேட்டேன். அதை வெறுங்கையில் தந்தார்கள். அப்படித் தரமுடியாது. முன்பு உள்ளூர்க் கடைகளில் வாங்கும்போது பாணை ஒருபேப்பரால் சுற்றித் தருவார்கள் என்றுசொன்னேன்.



திருநெல்வேலியில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடியில் பழம் வாங்கினேன். பழத்தை வெறுங்கையில் தந்தார்கள். அப்படித் தரமுடியாது ஒரு காகிதத்தால் சுற்றித் தரவேண்டும் என்றுசொன்னேன்.பொலித்தீன் பைக்குக்கு காசு போடட்டுமா? என்று கேட்டார்கள். ஆனால் உள்ளூர்க் கடையில் வாழைப்பழம் வாங்கினேன்.விலையும் குறைவு.கேட்காமலேயே பொலித்தீன் பையில் போட்டுத் தந்தார்கள்.

அப்படியென்றால் அரசாங்கத்தின் பொலித்தீன் தடைஎன்பதுபெருமுதலாளிகளுக்குமேலதிகலாபத்தை கொடுத்திருக்கிறதா? வாடிக்கையாளருக்கு பொலித்தீன் பைக்காக மேலதிக செலவைக் கூட்டியிருக்கிறதா? பொலித்தீன் பாவனையைத் தடுப்பதாகக் கருதிக் கொண்டு காசு இல்லாமல் கொடுக்கப்பட்ட பொலித்தீன் பைக்கு இப்பொழுது காசுவாங்குகிறார்கள். மாறாக பொலித்தீனுக்குப் பதிலாக வேறு சூழல் நேயபை ஒன்றுக்கு காசை வாங்கலாமே? பொருட்களை சூழலுக்கு நேசமான பைகளில் பொதி செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு பேரங்காடிகளுக்கு இல்லையா? பொலித்தீன் பைக்கு காசைக் கொடுக்கும் மக்கள் அந்தப் புதிய பைக்கும் காசு கொடுப்பார்கள். அந்த ஏற்பாட்டைக் குறித்து ஏன் இதுவரை சிந்திக்க முடியவில்லை?

பொலித்தீன் இல்லாத நாடு அழகானது. ஆரோக்கியமானது. ஆனால் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக சூழலுக்கு மாசில்லாத வேறு ஏதாவது ஒரு பை உற்பத்தி செய்யப்படவேண்டும். இங்கே பொலித்தீன் தடை ஒரு குறியீடு. அரசாங்கத்தின் கவர்ச்சிகரமான மாற்றத்திற்கான வாக்குறுதிகளின் நடைமுறையை, நடைமுறை விளைவை அது காட்டுகிறது.

இது கிட்டத்தட்ட கோத்தபாய அரசாங்கத்தின் காலத்தில் இயற்கை உரத்தை அறிமுகப்படுத்தியதைப் போன்றது தான். உலகம் முழுவதும் பொருளாதார ரீதியாக, ஒரே திறந்த சந்தைப் பொருளாதார அலகாக மாறியிருக்கும் ஓர் அரசியல், பொருளாதாரச் சூழலில், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் பாவனை எனப்படுவது ஒரு கெட்ட பண்பாடாக வளர்ந்துவிட்டது. ஒரு கெட்ட பண்பாட்டை எதிர்கொள்வதற்கு நல்ல பண்பாட்டை வளர்த்தெடுக்க வேண்டும். எனவே இந்த விடயத்தில் ஒரு புதிய பண்பாட்டை வளர்த்தெடுப்பது தான் நடைமுறையில் பொருத்தமாக இருக்கும். ஆனால் அரசாங்கத்திடம் அப்படிப்பட்ட திட்டங்கள் ஏதாவது உண்டா?

அனுர ஜனாதிபதியாக வந்த புதிதில் ஆவேசமாகவும் அதே நேரம் கவர்ச்சியாகவும் ஓர் உரை நிகழ்த்தினார். கிளீன் சிறிலங்காவுக்கான பிரகடனங்களில் அந்த உரையும் அடங்கும். அதில் அவர் ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்டினார். நீண்ட தூரப் பயணங்களில், பேருந்துகளில் பயணம் செய்யும்போது பெண்கள் முன்கூட்டியேநீர் அருந்துவதில்லை. ஏனென்றால் பயண வழிகளில் சிறுநீர் கழிப்பதற்கு சுத்தமான கழிப்பறைகள் இல்லை என்று அவர் கூறியது உண்மை. நீண்ட தூரப் பயணங்களில் பயணிகள் சிறுநீர் கழிப்பதற்கு சுத்தமான கழிப்பறைகள் இல்லை. இந்தக் கழிப்பறைகள் பெரும்பாலும் பயண வழிகளில் உள்ள பெரிய உணவகங்களோடு இணைந்து காணப்படும். இந்த உணவகங்களுக்கும் பேருந்து உரிமையாளர்களுக்கும் அல்லது சாரதிகள் அல்லது

(14ஆம் பக்கம் பார்க்க)

## வாரம் ஒருசிந்தனை 2

வேகம் வேட்கைவேட்டிவேட்டு வேடம் வேதம் வேது வேர் வேலன் வேலிவேலை இவைவே..யில் தொடங்கும் தமிழ்ச் சொற்கள்.

வேஎன்றால் மறை. வே..யில் தொடங்கும் சொற்கள் மறைப்பதைக் குறிப்பன.

வேடம்,தவ வேடம், துறவு வேடம், அருள் வேடம் என உயிர் மேம்பாடு சார்ந்தோரின் போர்வை, மறைப்பு, உடை.

கயிலையில் இருக்கிறேன் வருக. சிவன் உடைபுனைந்தவர் அழைக்கிறார். நீங்காத மகிழ்ச்சிபெறுக. நித்தியானந்தம் பெறுக. அவரோடு இருப்பவை பூக்கள். தெய்வப் பூக்கள். இரஞ்சித மலர்கள்.

வழக்குகள் சோதனைகள் குற்றச்சாட்டுகள் குறிவைப்புகள் யாவிலிருந்தும் விடுபடக் கயிலையில் இருக்கிறாராம். மலர்களோடு இருக்கிறாராம்.

அருள்நங்கை யேசுமேகேரளத்தவர். 'அருள் நங்கையின் தன் வரலாறு' என்ற 180 பக்கநூலை எழுதினார். 2012இல் பென்குயின் பதிப்பகம் வழி வெளியிட்டார். தவவேடங்கள் தீய வேடங்களான கதைசொல்கிறார்.

உலூரசி களப்பு ராகேரளத்து அருள் நங்கை. 'ஆண்டவனின் பெயரில்' அவர் எழுதிய 208 பக்கநூலை 2019இல் வெளியிட்டார். புறத்தே அருள் போர்வை. அகத்தே இருள் நோக்கம். அருள் நங்கை எழுதுகிறார்.

வன்னி மல்லாவி. தென்னிந்தியத் திருச்சபைப் போதகர். திருமணமானவர். மகளின் வயதுள்ள பெண்ணைக் கெடுக்கிறார். காவலர் தலையிட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்துகின்றனர். அருள் வேடம் பகலில். கண்ணில்லாக் காம இருள் கூட இரவில்.

யாழ்ப்பாணத்தில் தூய சம்பத்தரிசியார் கல்லூரிக் கிணற்றில் மறைந்த மாணவன். ஊர்காவற்துறைக் கன்னியர் மடக் கிணற்றுள் மறைந்த மாணவி. கொலைக் குற்றங்களிலிருந்து புறனுடையரைக் காத்தோர். இவர்கள் யாவரும் அருள் போர்வைக்குள் மறைந்திருக்கும் வேடதாரிகள்.

புனைவு எனில் கற்பனைவேடம். உண்மை அற்றது புனைவு. புனை துகில் என்கிறார் திருஞானசம்பந்தர். துறவு என்ற பொய் வேடம். புத்த மதத்தவரைச் சாடுகிறார் திருஞானசம்பந்தர்.

எட்டு மடங்களுக்குத் தலைவராகலாம். கெட்டமனத்தைப் புத்தத் துறவு எனலாமா? புனை வேடதாரி அல்லவா? 2026இல் கேட்கின்றனர் திசைராணி குணசேகரா, சஜீவனி அபயக்கோன்.

பற்று அற்றோம் என்று கூறுவரான படிற்று ஒழுக்கத்தார். நீ ஏன் பிறந்தாய்? நீ ஏன் பிறந்தாய்? என மனச்சாட்சி துன்புறுத்த வாழ்பவர்.

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம்
எற்றெற்றென்று ஏதம் பலவுந் தரும்.
(திருக்குறள், கூடாஒழுக்கம்
5ஆவது குறள்)

உயிர் மேம்பாடு ஆன்ம ஈடேற்றம் போர்வைகளாகப் பிறர் பாராட்டுப் பெறப் பத்தி வேடம் பூண்பவர். தமக்குள் பத்திச் சிந்தனை சிறிதும் இல்லாதவர்.

அருட்போர்வை அணிந்து பத்தியைவிற்பவர். அதற்காகவே பகலைக் கழிப்பவர். அருட்போர்வையை நீக்கி இரவில் தம் ஆசைகளுக்கு இடம் கொடுப்பவர். மனநோயாளிகள். பித்தர்.

12 திருமுறைகள். 10ஆம் திருமுறை திருமந்திரம். திருமூலர் அருளிய திருமந்திரம். ஒன்பது தந்திரங்களில் 7ஆம் தந்திரம் 36ஆவது தலைப்பு கூடா ஒழுக்கம் 3ஆவது பாடல்.

பத்திவிற் றுண்டுபகலைக் கழிவிடும்
மத்தகர்க் கன்றோமறுபிறப் புள்ளது
வித்துக்குற் றுண்டுவிளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே.

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அண்ணாமலைபுதிய இயக்கம் தொடங்கினார்:

## அவருடன் இணையை பா.ஜ.க.விலிருந்துவிலகும் தலைவர்கள்!

பா.ஜ.க. தமிழ்நாடு முன்னாள் தலைவர் அண்ணாமலையின் ராஜினாமாவை பாஜக தலைமை ஏற்றுக் கொண்டநிலையில், புதிய அரசியல் இயக்கம் தொடங்குவதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்த இயக்கம், கட்சியாகமாறி, தமிழகத்தில் அடுத்து நடக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் என்றும் தெரிவித்துள்ளார். அவர் அறிவிப்பு வெளியிட்ட 10 மணிநேரத்தில் 10 லட்சம் உறுப்பினர்கள் அவரது இயக்கத்தில் சேர பதிவுசெய்துள்ளனர்.

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை புதிய அரசியல் கட்சி தொடங்க இருப்பதாக கடந்த சில மாதங்களாக தகவல்கள் வெளியாகி வந்தன. இது தொடர்பாக தனது ஆதரவாளர்களுடன் தொடர்ந்து ஆலோசனையில் ஈடுபட்டு வந்தார். கடந்த 1-ம் தேதி டெல்லி சென்ற அவர், பாஜக தேசியத் தலைவர் நிதின் நவீனிடம் ராஜினாமா கடிதத்தை வழங்கினார்.

அதை ஏற்காத பாஜக, அமித் ஷா உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் மூலம் அண்ணாமலையை சமரசம் செய்யமுயன்றது. இதற்காக, 4 நாட்களாக டெல்லியிலேயே



முகாமிட்டிருந்தார். எனினும், பாஜகவில் இருந்து விலகும் திட்டத்தில் உறுதியாக இருந்த அவர், ஜூன் 5-ம் தேதி முடிவை அறிவிப்பதாக தெரிவித்திருந்தார். இந்நிலையில், அண்ணாமலையின் ராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொண்டதாக பாஜக தேசிய பொதுச் செயலாளர் அருண் சிங் அறிவித்தார். இதைத் தொடர்ந்து, புதிய அரசியல் இயக்கம் தொடங்கும் அறிவிப்பை டெல்லியில் இருந்தவாறே அண்ணாமலைவெள்ளிமதியம் காணொலி வாயிலாக சமூக ஊடகங்களில் வெளியிட்டார்.

"இந்த இயக்கம், கட்சியாகமாறி, தமிழகத்தில் அடுத்துநடக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடும். நாம் அனைவரும் முட்டாள்தனமான அரசியலில் இருந்து வெளியேவரவேண்டும். சாமானிய மனிதருக்கான 'காமன் மேன்' அரசியலை முன்னிறுத்தவேண்டும். அனைவரையும் அரசியலுக்கு கொண்டுவரவும், அறம் சார்ந்த அரசியலை முன்னெடுக்கவும் பயிற்சி அளிக்கும் வகையில் கோவையில் அப்துல் கலாம் பெயரில் பயிற்சி மையம் தொடங்கப்படும். உள்ளாட்சித் தேர்தலுக்கு நிறைய வேட்பாளர்களை இங்கிருந்துநாம் அனுப்புவோம்" என்று அண்ணாமலை தெரிவித்தார்.

காணொலிவாயிலாகநேரலையில் அவர் வெளியிட்ட இந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு, தமிழக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியானதும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் அவரது ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.

**சென்னையில் உற்சாக வரவேற்பு:**

வெள்ளி இரவு டெல்லியில் இருந்து சென்னை திரும்பிய அண்ணாமலையை வரவேற்க, விமான நிலையத்தில் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள், தொண்டர்கள் திரண்டனர். அண்ணாமலைக்கு பூங்கொத்து வழங்கியும், வாழ்த்து முழக்கம் எழுப்பியும் தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர். இதற்கிடையே, தான் தொடங்கும் அரசியல் இயக்கத்தில் இணையுமாறு மக்களுக்கு அண்ணாமலை அழைப்புவிடுத்தார். இதற்காக, 'இது நம்ம இயக்கம்' (**www.wetheleaders.org**) தளத்தில் பதிவுசெய்யுமாறும் கேட்டுக் கொண்டார். இவ்வாறு அவர் அறிவித்த 10 மணி நேரத்தில் 10 லட்சம் உறுப்பினர்கள் அவரது இயக்கத்தில் சேரபதிவு செய்துள்ளனர்.

முன்னதாக, பாஜகவில் இருந்து அண்ணாமலை விலகுவதாக தகவல் வெளிவரத் தொடங்கிய நிலையில், அவரது ஆதரவாளர்கள் தங்களது ராஜினாமா கடிதங்களை கட்சித் தலைமைக்கு அனுப்பிவந்தனர். புதிய அரசியல் இயக்கம் தொடங்குவதாக அவர் அதிகாரப்பூர்வமாக அறிவித்ததை தொடர்ந்து, தமிழக பாஜக துணைத் தலைவர் கரு.நாகராஜன், மாநிலச் செயலாளர் சுமதி வெங்கடேசன், ஓபிசி அணிமாநிலச் செயலாளர் நரேஷ் குமார் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிர்வாகிகளும் பாஜகவில் இருந்து விலகுவதாக அடுத்தடுத்து அறிவித்து வருகின்றனர். ●

# பிரிவுகள் நிரந்தரமல்ல...

மாலன்

கட்சிகளில் உயர்ந்த பதவிகளில் இருந்த மூத்ததலைவர்கள், தலைமைத்துவத்துடன் ஏற்பட்ட மனத்தாங்கல் அல்லது கருத்துமோதல்கள் காரணமாக, குழுக்களை உருவாக்கி, சிலகாலம் எதிர்ப்பை வெளிப்படுத்தி, தங்கள் சொந்தக் கட்சிகளைத் தொடங்கி, பின்னர் எதிரிகளிடம் சரணடைந்தோ அல்லது தங்கள் தாய்க் கட்சிகளுக்குத் திரும்பியோ உள்ளனர் என்பது தான் தமிழக அரசியல் வரலாறு. சில ஆரம்பகால வெற்றிகளுக்குப் பிறகு அந்தப் புதிய கட்சிகள் கரைந்தோ காணாமலோ போயிருக்கின்றன. அந்தப் பட்டியல் நீளமானத் அதன் சிலதுளிகள்:

**பொன்னம்பலதியாகராஜன்**

பி.டி.ராஜன் எனப் பிரபலமாக அறியப்பட்ட இவர், கேம்பிரிட்ஜ் மற்றும் ஆக்ஸ்ஃபோர்டில் கல்விகற்றவர். 1920 முதல் 1937 வரை ஜஸ்டிஸ் பார்ட்டியின் (நீதிக் கட்சி) முக்கிய சட்டப்பேரவை உறுப்பினராகவும், பொதுப் பணித் துறைஅமைச்சராகவும்,பின்னர் மதராஸ் மாகாணத்தின் முதல் அமைச்சராகவும் (ஃபர்ஸ்ட் மினிஸ்டர்) பணியாற்றினார். பெரியாரின் தீவிர சீடராகவும், திராவிட நாடுகோரிக்கையின் ஆதரவாளராகவும் இருந்த இவர், 1944-இல் பெரியார் நீதிக் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றியபோது பிரிந்து, சிலருடன் சேர்ந்து நீதிக் கட்சியை மீண்டும் உயிர்ப்பித்தார்.

1946 தேர்தலை புறக்கணித்த அந்தக் கட்சி, 1951இல் ஒன்பது இடங்களில் போட்டியிட்டு ஒன்றில் மட்டும் வென்றது. ராஜன் மதுரை வடக்கு தொகுதியில் மோசமாகத் தோற்றார் ஆனால், கம்பத்தில் வெற்றிபெற்றார். 1957-க்குள் நீதிக் கட்சி முற்றிலும் மறைந்தது.

**ராஜாஜி**

காங்கிரஸின் உயர்ந்த தலைவர்களில் ஒருவரும், "மகாத்மா காந்தியின் மனசாட்சி" எனப் போற்றப்பட்டவருமான மூதறிஞர் ராஜாஜி, 1952-இல் காங்கிரஸ் பெரும்பான்மை இழந்தபோது நேருவின் அழைப்பில் தமிழக முதல்வரானார். 1959-இல் காங்கிரஸை விட்டுப் பிரிந்து சுதந்திரா கட்சியைத் தொடங்கினார்.

1967-இல் காங்கிரஸின் பிரதான எதிரியான திமுகவுடன் இணைந்து காங்கிரஸை வீழ்த்தினார். 1971-இல் தன் அரசியல் எதிரியான காமராஜுடன் கூட்டணி அமைத்தார் ஆனால், அந்தச் சட்டப்பேரவைத் தேர்தலில் சுதந்திர கட்சி ஆறு இடங்களையே வென்றது.

1972-இல் ராஜாஜி மறைந்த பிறகு சுதந்திரா கட்சியும் மறைந்தது.

**ஈரோடு வெங்கடப்ப கிருஷ்ணசாமி சம்பத்**

திமுகவின் ஐம்பெரும் தலைவர்களில் ஒருவரான சம்பத்,அண்ணாவுக்கு அடுத்தநிலைத் தலைவராக இருந்தார்.

1961-இல் பிரிந்துதமிழ் தேசியக் கட்சியைத் தொடங்கினார். தமிழ் மக்கள் நன்கு அறிந்த அரசியல் முகங்களான கண்ணதாசன், பழ.நெடுமாறன், எம்.பி. சுப்ரமணியம், வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோர் அந்தக் கட்சியில் இடம் பெற்றிருந்தார்கள். 1962 சட்டப்பேரவைத் தேர்தலில் கட்சிபோட்டியிட்ட அனைத்து இடங்களிலும் தோல்வியடைந்தது.

1964-இல் சம்பத் தனது கட்சியை திமுகவின் பிரதான எதிரியான காங்கிரஸோடு இணைத்தார்.

**இராஜகோபாலன் நெடுஞ்செழியன்**

அண்ணாவின் நம்பத்தகுந்ததுணை. அண்ணா உயிருடன் இருந்தபோதே திமுகவின் பொதுச் செயலாளராக இருந்த (1955-60) அரிதான பெருமைபெற்றவர். அண்ணா சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது, இடைக்கால முதல்வராகவும் பணியாற்றினார்.

1976-இல் கருணாநிதியுடன் ஏற்பட்ட முரணால் பிரிந்து ப.உ. சண்முகம், க.ராசாராம், செ.மாதவனுடன் இணைந்து மக்கள் திமுகவைத் தொடங்கினார் அது விரைவில் அதிமுகவில் இணைந்தது. 1989 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பு அரங்கநாயகம், பண்ருட்டி ராமச்சந்திரன், திருநாவுக்கரசர் ஆகியோருடன் பிரிந்து நால்வர் அணி அமைத்தனர். தேர்தலில் படுதோல்வி. ஜெயலலிதா தலைமையிலான அதிமுகவுக்கே திரும்பி 1991 அமைச்சரவையில் நிதியமைச்சராகிறார்.

**குமரிமங்கலம் அனந்தகிருட்டிணன்**

மக்களவை உறுப்பினராகவும், ஐந்து முறை சட்டப் பேரவை உறுப்பினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் திகழ்ந்தகுமரி அனந்தன், 1980-ஆம் ஆண்டு காங்கிரஸிலிருந்து விலகி காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தொடங்கினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு அதைக் காங்கிரஸில் இணைத்தார். பின்னர், சில ஆண்டுகளுக்குப் பிறகு தொண்டர் காங்கிரஸ் என்ற ஒன்றைத் தொடங்கினார். பின்னர் மீண்டும் காங்கிரஸுக்குத் திரும்பினார்.

**செண்டாங்காடு டி. சோமசுந்தரம்**

பின்னாளில் இந்தியாவின் குடியரசுத் தலைவரான ஆர். வெங்கடராமனை 1967-இல் தோற்கடித்து அரசியலில் அடியெடுத்து வைத்தபோது கவனத்தை ஈர்த்தவர். எம்ஜி ஆருடன் இணைந்து அதிமுகவை உருவாக்கிய அதன் ஆரம்பகால முதன்மைத் தலைவர்களில் ஒருவர்.

ஆனால், ஊழல் குறித்து எம்ஜிஆரைக் கட்சிக்குள் விமர்சித்தவரும் இவரே. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட அவர், 1984-இல் நமது கழகத்தைத் தொடங்கினார் 1985 தேர்தலில் முழுமையாக தோல்வியடைந்தார். பின்னர், கட்சியைக் கலைத்து மீண்டும் எம்ஜி ஆரிடம் திரும்பினார். ஜெயலலிதாவின் 1991 அமைச்சரவையிலும் இடம் பெற்றார். 1996 தேர்தலுக்குப் பிறகு, கண்ணப்பன், முத்துசாமி ஆகியோருடன் போட்டி அதிமுக தொடங்கி செல்வாக்கு இழந்துவிட்டார்.

**சுப்புராமன் திருநாவுக்கரசர்**

27 வயதில் சட்டப்பேரவை துணைத் தலைவரான இவர், 1977 முதல் 1996 வரை அறந்தாங்கியில் தொடர்ச்சியாக வென்ற பெருமைக்குரியவர். ஒரு காலத்தில் ஜெயலலிதாவுக்கு நெருக்கமான ஆதரவாளர். நால்வர் அணி, அண்ணா-புரட்சித் தலைவர் முன்னேற்றக் கழகம், போட்டி அதிமுக என்று பயணித்தும், திமுக கூட்டணி, பாஜக, காங்கிரஸ் என்று மாறிமாறி பயணித்தும் அரசியலைத் தொடர்ந்தவர்.

1999 மக்களவைத் தேர்தலில் திமுக-பாஜக கூட்டணியில் இணைந்து மோதிரம் சின்னத்தில் வென்றார். மத்திய அரசில் இணை அமைச்சராக உயர்ந்தார். பாஜக சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக்கப்பட்டார். பின்னர், காங்கிரஸில் இணைந்து, 2016-இல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார். 2019-இல் திருச்சியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸில் தொடர்கிறார்.

**தாவீதுபாண்டியன்**

தா. பாண்டியன் மாணவப் பருவத்திலிருந்தே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடனும் அதன் இலக்கிய அமைப்பானகலை இலக்கியப் பெருமன்றத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு இயங்கியவர். 1989-இல் எஸ்.ஏ. டாங்கேவும்,மொகித் சென்னும் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடங்கிய போதுஅதில் இணைந்தார். 1989-இல் காங்கிரஸின் கை சின்னத்தில் போட்டியிட்டு வென்ற அந்தக் கட்சியின் ஒரே மக்களவை உறுப்பினர் தா. பாண்டியன் தான்.

2000-இல் மீண்டும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குத் திரும்பினார்.

**கோவிந்தசாமிகருப்பையா மூப்பனார்**

கட்சிக்குள் எழும் பிரச்னைகளைத் தீர்க்க இந்திரா - ராஜீவின் நம்பிக்கையைப் பெற்றதலைவர். எட்டு ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். 1989 சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸின் முதல்வர் வேட்பாளர்.

1996 சட்டப்பேரவைத் தேர்தலில் ஜெயலலிதாவுடன் கூட்டணி தொடரவேண்டும் என்ற நரசிம்மராவின் முடிவுடன் மாறுபட்டு காங்கிரஸிலிருந்து பிரிந்து தமிழ் மாநில காங்கிரஸை தொடங்கினார். ஆனால், அடுத்த தேர்தலில், 2001-இல் அதே ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்ததுகாலத்தின் நகை முரண். அந்தக் கட்சிகாங்கிரஸில் இணைந்தது.

**வாழப்பாடி கூத்தன் இராமமூர்த்தி**

காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஐந்து முறை மக்களவை உறுப்பினராக இருந்தவர் வாழப்பாடிராமமூர்த்தி. நரசிம்மராவ் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர் 1995-இல் காங்கிரஸிலிருந்து விலகி திவாரி காங்கிரஸில் இணைந்தார். திவாரிகாங்கிரஸ் காங்கிரஸோடு இணைந்தபோது அதிலிருந்து விலகி தமிழக ராஜீவ் காங்கிரஸை தொடங்கினார். அதிமுக-பாஜக கூட்டணியில் இணைந்து 1999-இல்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பசுபிக் தீவுகளில் சீன ஆதிக்கம்: அவுஸ்திரேலிய பிடி தளர்கிறதா ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா




பசுபிக் தீவுகள் உலக வரைபடத்தில் சிறிய நாடுகளாகத் தோன்றினாலும், அவற்றின் கடல்சார் பரப்பு, இயற்கை வளங்கள் மற்றும் மூலோபாய அமைவிடம் காரணமாக உலக வல்லரசுகளின் போட்டி அதிகரித்துள்ளது. 21ஆம் நூற்றாண்டின் புவிசார் அரசியலில் மிகுந்த கவனத்தை ஈர்க்கும் முக்கிய இடத்தை பசுபிக் நாடுகள் பெற்றுள்ளன. குறிப்பாக சீனா கடந்த இருபது ஆண்டுகளில் பசுபிக் தீவுகளில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தியுள்ளமை, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு புதிய சவாலாக மாறியுள்ளது.

### சீனாவின் அணுகுமுறை

பசுபிக் தீவு நாடுகளுடன் சீனா தனது உறவுகளை பொருளாதார உதவிகள், கட்டுமானத் திட்டங்கள், கடன்கள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் வலுப்படுத்தி வருகிறது. பெருஞ்சாலைகள், துறைமுகங்கள், அரச கட்டிடங்கள், விளையாட்டு அரங்குகள் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளை அமைப்பதற்காக பல பில்லியன் டொலர் முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

சீனாவின் ஆசிய சாலைத் திட்டத்தில் பல பசுபிக் நாடுகள் இணைந்துள்ளன. இதன் மூலம் சீன நிதியுதவி அதிகரித்ததுடன், அந்த நாடுகளின் பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பும், ஆதிக்க தாக்கமும் விரிவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டு சீனா மற்றும் சொலமன் தீவுகள் இடையே கையெழுத்தான பாதுகாப்பு ஒப்பந்தம் உலகளவில் பெரும் கவனத்தை ஈர்த்தது. இந்த ஒப்பந்தம் சீன பாதுகாப்புப் படைகள் மற்றும் காவல்துறை உதவிகளை அந்நாட்டில் வழங்கும் வாய்ப்பை உருவாக்கியது.

இது வெறும் பொருளாதார உறவாக மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் இராணுவத் தளங்களை அமைக்கும் வாய்ப்புகளுக்கான அடித்தளமாகவும் பார்க்கப்பட்டது. இதனால் அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா தங்களது பாதுகாப்பு நலன்கள் பாதிக்கப்படலாம் என்ற கவலையை வெளிப்படுத்தின.




### சீனாவின் வளர்ந்து வரும் பாதிப்பு


கடந்த சில ஆண்டுகளாக சீனா பசுபிக் பிராந்தியத்தில் தனது முதலீடுகளையும் அரசியல் உறவுகளையும் வேகமாக விரிவுபடுத்தி வருகிறது. துறைமுகங்கள், சாலைகள், அரசாங்கக் கட்டிடங்கள் மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்புகளில் பில்லியன் டொலர் மதிப்பிலான முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு சாலமன் தீவுகளுக்கும் சீனாவுக்கும் இடையே கையெழுத்தான பாதுகாப்பு ஒப்பந்தம், அவுஸ்திரேலியா மற்றும் அதன் கூட்டாளிகளுக்கு எச்சரிக்கை மணி அடித்தது. இது பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ மற்றும் அரசியல் செல்வாக்கு அதிகரித்து வருவதை வெளிப்படுத்தியது.

பசுபிக் தீவு நாடுகளின் பார்வையில் பாதுகாப்பு என்பது இராணுவ அச்சுறுத்தல் மட்டுமல்ல. காலநிலை மாற்றமே மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். கடல் மட்ட உயர்வு காரணமாக பல தீவு நாடுகள் தங்களது எதிர்கால இருப்பு குறித்தே கவலைப்படுகின்றன. பல ஆண்டுகளாக நிலக்கரி ஏற்றுமதியைத் தொடர்ந்த அவுஸ்திரேலியாவின் கொள்கைகள் குறித்து பசுபிக் தலைவர்கள் அதிருப்தி வெளியிட்டனர். இதனால், நமது வாழ்வாதாரத்தை அச்சுறுத்தும் நாட்டே எவ்வாறு எமது முக்கிய கூட்டாளியாக இருக்க முடியும்? என்ற கேள்வி எழுந்தது.

### பசுபிக்கில் அவுஸ்திரேலிய வகிபாகம்

சீனாவின் ஆதிக்கம் காரணமாக பசுபிக் தீவு நாடுகளில் அவுஸ்திரேலிய வகிபாகம் குறைகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஒரு காலத்தில் பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள சிறிய தீவு நாடுகளின் முதன்மை பாதுகாவலராகவும், பொருளாதார ஆதரவாளராகவும், அரசியல் செல்வாக்கு மிக்க சக்தியாகவும் அவுஸ்திரேலியா கருதப்பட்டது. ஆனால் கடந்த ஒரு தசாப்தத்தில் உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும், குறிப்பாக சீனாவின் எழுச்சியும், பசுபிக் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவின் பாரம்பரிய ஆதிக்கம் சவாலுக்கு உள்ளாகியுள்ளதா என்ற கேள்வியை எழுப்புகின்றன.



> 2022 ஆம் ஆண்டு சாலமன் தீவுகளுக்கும் சீனாவுக்கும் இடையே கையெழுத்தான பாதுகாப்பு ஒப்பந்தம், அவுஸ்திரேலியா மற்றும் அதன் கூட்டாளிகளுக்கு எச்சரிக்கை மணி அடித்தது. இது பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ மற்றும் அரசியல் செல்வாக்கு அதிகரித்து வருவதை வெளிப்படுத்தியது. பசுபிக் தீவு நாடுகளின் பார்வையில் பாதுகாப்பு என்பது இராணுவ அச்சுறுத்தல் மட்டுமல்ல. காலநிலை மாற்றமே மிகப்பெரிய அச்சுறுத்தலாகும்.




பப்புவா நியூ கினி, ஃபிஜி, சாலமன் தீவுகள், வனுவாட்டு, டோங்கா, சமோவா போன்ற நாடுகளுடன் அவுஸ்திரேலியா நீண்டகால உறவுகளைப் பேணிவந்துள்ளது. அபிவிருத்தி உதவி, கல்வி உதவித்தொகைகள், சுகாதாரத் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் அவுஸ்திரேலியா தனது செல்வாக்கை நிலைநிறுத்தியது.

பசுபிக் தீவு நாடுகளின் பல அரசியல் தலைவர்களும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் அரசியல் மற்றும் சமூக ரீதியாக ஆழமான உறவுகள் உருவாகின.

### அவுஸ்திரேலியாவின் புதிய அணுகுமுறை:


இந்தச் சூழ்நிலையை உணர்ந்த அவுஸ்திரேலிய அரசுகள் அண்மைக் காலங்களில் பசுபிக் நாடுகளுடனான உறவுகளை மீளக் கட்டியெழுப்ப முயற்சித்து வருகின்றன. அதிக அபிவிருத்தி உதவி, பாதுகாப்பு ஒப்பந்தங்கள், காலநிலை மாற்றத்திற்கான நிதியுதவி மற்றும் தொழிலாளர் குடியேற்றத் திட்டங்கள் ஆகியவை விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, **"Pacific Step-up"** மற்றும் பின்னர் **"Pacific Engagement"** போன்ற திட்டங்கள் மூலம் அவுஸ்திரேலியா தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வகிபாகம் முற்றிலும் குறைந்து வருகிறது என்று கூற முடியாது. மாறாக, அது தற்போது போட்டியிடப்படும் செல்வாக்காக மாறியுள்ளது. முன்பு அவுஸ்திரேலியாவிற்கு மாற்று சக்தி எதுவும் இல்லாத நிலையில், இன்று சீனா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளும் பசுபிக் பிராந்தியத்தில் தங்களது இருப்பை வலுப்படுத்துகின்றன. இதனால் பசுபிக் நாடுகள் பல்வேறு சக்திகளுடன் உறவுகளை வளர்த்து, தங்களுக்கான நன்மைகளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

பசுபிக் தீவு நாடுகளில் அவுஸ்திரேலியாவின் செல்வாக்கு முழுமையாக வீழ்ச்சியடைந்துவிட்டது என்று கூறுவது மிகைப்படுத்தலாகும். ஆனால் அதன் தனிப்பட்ட ஆதிக்கம் சவாலுக்குள்ளாகியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. சீனாவின் எழுச்சி, காலநிலை மாற்ற அரசியல் மற்றும் பசுபிக் நாடுகளின் சுயாதீன வெளிநாட்டு கொள்கைகள் ஆகியவை புதிய அரசியல் சமநிலையை உருவாக்கியுள்ளன.

எனவே, அவுஸ்திரேலிய வகிபாகம் குறைகிறதா? என்ற கேள்விக்கான பதில் - குறைந்து வருவதல்ல் மாறாக




அது புதிய போட்டி மற்றும் மாற்றங்களின் சூழலில் மறுவரையறை செய்யப்படுகிறது என்பதே ஆகும்.

### ஏன் பசுபிக் தீவுகள் முக்கியம்?

பசுபிக் பெருங்கடல் உலக வர்த்தகப் போக்குவரத்தின் முக்கிய பாதைகளில் ஒன்றாகும். மேலும் கடல்சார் மீன்பிடி வளங்கள், கனிம வளங்கள் மற்றும் எதிர்கால ஆழ்கடல் சுரங்க வாய்ப்புகள் இந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை உயர்த்துகின்றன.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளில் ஒவ்வொரு சிறிய தீவு நாடும் ஒரு வாக்குரிமையைக் கொண்டுள்ளது. எனவே, இந்நாடுகளின் ஆதரவைப் பெறுவது சீனாவிற்கு சர்வதேச அரசியலில் கூடுதல் செல்வாக்கை வழங்குகிறது.

சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை எதிர்கொள்ள அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் தங்களது ஈடுபாட்டை அதிகரித்துள்ளன. புதிய தூதரகங்கள் திறக்கப்பட்டுள்ளன. பொருளாதார உதவிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. காலநிலை மாற்றம், கல்வி மற்றும் சுகாதாரத் திட்டங்கள் வழியாக பசுபிக் நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக அவுஸ்திரேலியா, பசுபிக் பகுதியை தனது பாரம்பரிய செல்வாக்குப் பகுதியாகக் கருதுவதால், சீனாவின் முன்னேற்றத்தை கவலையுடன் கவனித்து வருகிறது.

### பசுபிக் நாடுகளின் நிலை:

பசுபிக் நாடுகள் தங்களை வல்லரசுப் போட்டியின் களமாக அல்லாமல், சுயாதீன நாடுகளாகக் காண விரும்புகின்றன. பல நாடுகள் சீனாவுடனும் மேற்கு நாடுகளுடனும் ஒரே நேரத்தில் உறவுகளைப் பேணுகின்றன. தங்களுக்கு அதிக நன்மை தரக்கூடிய முதலீடுகள் மற்றும் உதவிகளைப் பெறுவதற்காக பலதரப்பு வெளிநாட்டு கொள்கையைப் பின்பற்றுகின்றன.

அவர்களின் பார்வையில், காலநிலை மாற்றம், கடல் மட்ட உயர்வு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவையே மிகப்பெரிய சவால்கள் வல்லரசுகளின் போட்டி அல்ல. பசுபிக் தீவுகளில் சீனாவின் செல்வாக்கு இன்று உலக அரசியலின் முக்கிய விவாதங்களில் ஒன்றாக மாறியுள்ளது. பொருளாதார உதவிகள் மற்றும் கட்டமைப்பு முதலீடுகள் மூலம் தொடங்கிய இந்த முன்னேற்றம், தற்போது பாதுகாப்பு மற்றும் புவிசார் அரசியல் பரிமாணங்களையும் உள்ளடக்கியுள்ளது.

எதிர்காலத்தில் பசுபிக் பிராந்தியம் சீனா மற்றும் மேற்கு நாடுகளுக்கிடையிலான மூலோபாயப் போட்டியின் முக்கிய அரங்காகத் தொடரும். ஆனால் அந்தப் போட்டியின் மையத்தில் இருக்கும் தீவு நாடுகள் தங்களது தேசிய நலன்களையும் சுயாட்சியையும் பாதுகாத்துக் கொண்டு உலக சக்திகளுடன் சமநிலையான உறவுகளை உருவாக்குவது தான் அவர்களின் மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வைத்தியசாலைகளிம் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நான்கு வருடத் திட்டம்

கொழும்பு, ஜூன். 07

நாட்டில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் விசேட திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்டம் வெள்ளவாய ஆதார மருத்துவமனையில் முன்னெடுத்த விசேட கண்காணிப்பு விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த திட்டம் அடுத்த 4 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்காக 31,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும். அரசாங்க வைத்தியசாலை அமைப்பை மேலும் மேம்படுத்தி உயர்தர வசதிகளை வழங்குவது இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மத்திய மற்றும் மாகாண கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளின் குறைபாடுகளை ஆய்வு செய்து உடனடி தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

(அ)

## பொலித்தீன் பை:...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழி நடத்துனர்களுக்கும் இடையே எழுதப்படாத வணிக உடன்படிக்கை உண்டு. எங்கே பேருந்து நிறுத்தவேண் டும், எப்பொழுது நிறுத்தவேண்டும் என்பதெல்லாம் அந்த வணிக உடன்படிக்கையின் அடிப்படையில்தான் அமையும். அவ்வாறு பேருந்து குறிப்பிட்ட உணவகத் தில் நிறுத்தப்படும்போது அதனால் லாபமீட்டும் அந்த உணவகம், தன்னிடம் உணவருந்த வரும் பயணிகளுக்கு பாதுகாப்பான சுத்தமான கழிப்பறை வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது கட்டாயம்.

ஆனால் அதனை அந்தந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதரர்களும் கவனிப்பதாகத் தெரியவில்லை. என்.பி.பி ஆட்சிக்கு வந்து கிட்டத்தட்ட 18மாதங்கள் ஆகின் றன. இப்பொழுதும் போக்குவரத்துப் பாதைகளில் காணப் படும் கழிப்பறைகள் நாறிக் கொண்டிருக்கின்றன. ஜனாதி பதியின் கவர்ச்சியான வாக்குறுதிகளைப் போல. ஏற்கனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம், ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என்று ஜேவிபி கொடுத்த வாக்குறுதிகள் நாறத் தொடக்கிவிட்டன. பொலித்தீன் தடையும், ஒரு நாள் தண்ணீர் போத்தல் தடையும் அப்படி நாறப்போகும் வாக்குறுதிகள் தானா?

## உண்மையைக் காண...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரது பத்திரிகைத் தொழில், இத்தகைய முத்திரைகளால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும், அந்த முத்திரையை எந்தத் தரப்பு குத்தியது என்ற பாகுபாடின்றி, சமமான துல்லியத்தோடும் தார்மீகப் பொறுப்போடும் ஆவணப்படுத்தியது.

பேச்சுவார்த்தை மற்றும் ஜனநாயகச் செயன்முறை மூலமாகவே முன்னோக்கி நகர முடியும் என்று நம்பிய தமிழ் தலைவர்கள் மீது ஜெயராஜ் தனிக் கவனம் செலுத்தினார். விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் “ஏகப் பிரதிநிதிகள்” என்ற வாதத்திற்கு இத்தலைவர்களின் அரசியல் தகுதிகளும் சர்வதேச அங்கீகாரமும் பெரும் சவாலாக இருந்த காரணத்தினாலேயே, அவர்கள் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்தப் படுகொலைகளை டி.பி.எஸ் மிகுந்த தார்மீகத் தெளிவோடு ஆராய்ந்தார். தமிழர்களின் உரிமைகளுக்கான அர்ப்பணிப்பை அவர்கள் கைவிட்டதால் அல்ல, மாறாக அதற்காக அவர்கள் உறுதியாக நின்ற காரணத்தினாலேயே விடுதலைப் புலிகள் அவர்களைக் கொன்றனர் என்பதை அவர் புரிந்து கொண்டார். அதை அவர் பலமுறை, தன் சொந்தப் பாதுகாப்பைப் பணயம் வைத்து பகிரங்கமாகக் கூறினார்.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) போன்ற அமைப்புகள் ஜெயராஜின் ஆவணங்களையே பெரிதும் நம்பியிருந்தன. புலம்பெயர்ந்து வாழ்ந்த பல வாசகர்கள் இவரை நாடி ஓடியதற்கு ஒரு காரணம் உண்டு. வேறு எங்கும் கிடைக்காத, ஒருதலைப்பட்சமான ஒற்றை வாதங்களுக்குள் சுருங்காத, யதார்த்தச் சிக்கல்களைப் புரிந்து கொண்ட, தன் சொந்தச் சமூகத்தையே சுயவிமர்சனம் செய்யத் தூண்டிய ஒரு நேர்மையான பத்திரிகைச் செயல்பாட்டை அவர் மட்டுமே வழங்கினார்.

அவரது நம்பகத்தன்மை இன எல்லைகளைக் கடந்து நின்றது. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் என அனைத்து இலங்கையர்களும் அவரை வாசித்தனர் அவரை நம்பினர். தசாப்த காலங்களாக உண்மைகளைத் திரித்துக் கூற மறுத்ததன் மூலமாகவே அந்தப் பேராதரவையும் நம்பிக்கையையும் அவர் சம்பாதித்திருந்தார்.

தன்னால் சரிபார்க்க முடியாத எதையும் பிரசுரிக்காத ஒரு மனிதராகவே அவர் சகலராலும் மதிக்கப்பட்டார். செய்திகளை உண்மைதானா என மிக நுணுக்கமாகச் சரிபார்க்கும் அவரது அணுகுமுறையை, அவரது சக ஊழியர்கள் அவரது தனித்துவமான அடையாளமாகக் குறிப்பிட்டனர். முந்திக் கொண்டு செய்தியை வெளியிடுவதில் அவருக்கு ஆர்வமிருக்கவில்லை, மாறாகச் சரியாக வெளியிடுவதிலேயே அவர் குறியாக இருந்தார்.

பலதரப்பிலிருந்தும் பொய்ப் பிரச்சாரங்கள் சூழ்ந்திருந்த ஒரு சூழலில், அவரது அந்தத் ஒழுக்கநெறி வெறும் தொழில் சார்ந்த பண்பு மட்டுமல்ல, அது ஒரு வகையான எதிர்ப்பின் வடிவமுமாகும்.

அவர் விட்டுச் சென்ற மரபு என்பது ஒரு மாபெரும் ஆவணக் காப்பகம் (archive) ஆகும். நான்கு தசாப்த காலங்களாக அவர் செய்த செய்திச் சேகரிப்புகள், விமர்சனங்கள் மற்றும் ஆய்வுகள் அனைத்தும், ஒரு தமிழரின் பார்வையில் இலங்கையின் இனப் பிரச்சினை குறித்த மிக விரிவான பத்திரிகை ஆவணமாகத் திகழ்கிறது.

வருங்கால வரலாற்றாசிரியர்கள் கண்டிப்பாக இதனை நாடி வருவார்கள். இது வன்முறைகளையும் அரசியல் தோல்விகளையும் மட்டுமல்லாமல், கொல்லப்பட்ட தலைவர்கள் மற்றும் தனிநபர்கள், இடம்பெயர்ந்த சமூகங்கள், தள்ளிப்போடப்பட்ட கனவுகள் ஆகியவற்றை அந்தச் சமூகத்தோடு ஆழமாகப் பிணைந்திருந்த ஒருவரால் மட்டுமே தரக்கூடிய துல்லியமான விபரங்களோடு பதிவு செய்துள்ளது.

தமிழ் சமூகங்கள் தங்களின் பூர்வீக வாழ்விடங்களிலிருந்து நிரந்தரமாக சிதறடிக்கப்பட்டதையும், அதனுடன் தொடர்ந்த அரசியல் அவலங்களையும் வேறு எவரும் எட்ட முடியாத துல்லியமான ஆவண நெறியோடு அவர் பதிவு செய்தார்.

அவர் தனது தொழில் வாழ்க்கையின் பெரும்பகுதியைத் புலம்பெயர்ந்து, கிட்டத்தட்ட ஒரு நாடோடிப் போக்கிலேயே கழித்த போதிலும், இலங்கை மீதான அவரது அன்பும், அதன் ஜனநாயக எதிர்காலம் மீதான அர்ப்பணிப்பும் ஒருபோதும் குறையவில்லை. உடல் நலக் குறைபாடுகள் இருந்தபோதிலும், தனது மறைவுக்குச் சற்று காலம் முன்பு வரை தொடர்ந்து கட்டுரைகளைப் பகிர்ந்து கொண்டு தனது பணியில் உறுதியாக இருந்தார்.

தளராமல் நீடித்த அந்த நிலைத்தன்மை, சோர்வடைய மறுத்த குணம் ஆகியவை, பத்திரிகைத்துறை என்பது அதன் உச்சக் கட்டத்தில் எத்தகையதாக இருக்க முடியும் என்பதற்கான மிகச் சிறந்த சான்றாகும்.

ஒருவர் தன் சொந்தச் சமூகத்தை நேசித்துக் கொண்டே, அதைப் பற்றிய உண்மைகளையும் தயங்காமல் பேச முடியும் என்பதை டி.பி.எஸ் நான்கு தசாப்தங்களாக நிரூபித்துக் காட்டினார். அந்தத் தார்மீகத் துணிச்சல் என்பது சமூக ஒற்றுமையைக் காட்டிக் கொடுக்கும் துரோகம் அல்ல, மாறாக அதன் ஆகச்சிறந்த வெளிப்பாடாகும். நேர்மையை வற்புறுத்துபவர்கள் மீது மிக எளிதாக வீசப்படும் “துரோகி” என்ற முத்திரை, அதை குத்துபவர்களின் தரத்தைத் தான் காட்டுகிறதே தவிர, யாருக்குக் குத்தப்பட்டதோ அவர்களைப் பற்றி அது எதையும் சொல்வதில்லை.

டி.பி.எஸ். உண்மைகளை உரக்கச் சொன்னதன் மூலமாகவே வாழ்வைக் கொண்டாடினார். தனது உயிருக்கே ஆபத்து வந்தபோதிலும், தனது பத்திரிகையை இழக்க நேரிட்ட போதும், அதன் பின்னர் தசாப்தங்களாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்த காலத்திலும் அவர் அதைச் செய்தார். பத்திரிகைத் துறையாகவும், அதே சமயம் காலத்தின் சாட்சியமாகவும் நிமிர்ந்து நிற்கும் ஒரு மாபெரும் படைப்புலகத்தை அவர் புலம்பெயர் வாழ்விலும் கட்டியெழுப்பினார்.

அவர் விட்டுச் சென்ற அந்தப் பெருவெற்றிடத்தை நிரப்புவது மிகவும் கடினம். ஒருவேளை அது நிரப்பப்படாமலேயே கூடப் போகலாம். அவருடைய மனைவி, குடும்பத்தினர் மற்றும் அவரை அறிந்த அனைவருக்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர் விரும்பியபடியே, நாம் அவரை மிகவும் நிதானத்தோடும், நேர்மையோடும், அவர் நமக்கு விட்டுச் சென்ற உன்னதமான பணிகளுக்கான நன்றியுணர்வோடும் கௌரவிப்போம்.

**(கட்டுரையாளர் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) முன்னாள் பொதுச்செயலாளர்)**

## சுதந்திரத்தின் மிகப்பழைய...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் நலனுக்காக அன்றி, தேசிய நலனுக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன என்ற பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவும்.

வரலாற்று ரீதியான அநீதிகளைச் சரி செய்வது என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு வழங்கப்படும் சலுகையாகப் பார்க்கப்படக் கூடாது. அது தேசிய ஒற்றுமைக்கான ஒரு முதலீடாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், தாங்கள் அநீதி இழைத்தவர்களைத் தொடர்ந்து ஒதுக்கி வைப்பதன் மூலம் சமூகங்கள் பலமடைவதில்லை.

மாறாக, அந்த ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலமாகவே அவை பலமடைகின்றன. சுதந்திரத்திற்குப் பின் ஒரு சிறுபான்மை இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட முதலாவது பெரும் அநீதியை மாற்றியமைக்க முடியாது. ஆனால் அதன் விளைவுகளுக்குத் தீர்வு காண முடியும். அவ்வாறு செய்வது நல்லிணக்கத்தை வலுப்படுத்தும், சமூக ஒற்றுமையை மேம்படுத்தும், அத்துடன் அனைத்து சமூகங்களும் சமமான கண்ணியத்துடனும் சமமான நம்பிக்கையுடனும் வாழும் ஒரு நாடு என்ற இலங்கையின் தொலைநோக்குப் பார்வைக்கு நெருக்கமாகக் கொண்டு செல்லும்.

ஜனாதிபதியினதும் பிரதமரினதும் வெசாக் தினச் செய்திகள் இதையே உறுதியளித்திருந்தன. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தோட்டச் சீர்திருத்தமானது, அந்த வாக்குறுதியை வெறும் வார்த்தைகளில் மட்டுமன்றி, எந்தவொரு தனி அரசாங்கத்தையும் தாண்டி நிலைத்து நிற்கக்கூடிய மற்றும் மிக நீண்ட காலமாக காத்திருக்கும் மக்களைச் சென்றடையக்கூடிய நிலையான கொள்கையின் மூலம் நிறைவேற்றுவதற்கான தருணம் இதுவாகும். ●

## பிரிவுகள் நிரந்தர...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேலம் தொகுதியில் வென்று வாஜ்பாய் அமைச்சரவை யில் இடம்பெற்றார். 1999 தேர்தலில் திமுக - பாஜக கூட்டணியில் தோல்வியைத் தழுவுகிறார். 2001 தேர்த லில் தனித்துப் போட்டியிட்டார். கட்சி அனைத்துத் தொகுதிகளிலும் தோற்றது. கட்சியைக் கலைத்து விட்டு காங்கிரஸூக்கே மீண்டும் திரும்பினார்.

**பழனியப்பன் சிதம்பரம்**

இன்றுபாஜக விமர்சகர் ஆனால் 2001-இல் அதே பாஜகவுடன் கூட்டணியில் போட்டியிட்டார். ஜெயலலிதாவுடன் இணைவதை எதிர்த்து, மூப்பனாரை விட்டு பிரிந்து தமிழ் மாநில ஜனநாயகப் பேரவையைத் தொடங்கி தமிழகத்தில் திமுக தலைமைவகித்த தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்தார். அந்தக் கூட்டணி நீண்ட நாள் நிலைக்கவில்லை. 2004-இல் மீண்டும் காங்கிரஸில் இணைந்தார்.

**வையாபுரிகோபால்சாமி (வைகோ)**

ஒரு காலத்தில் கருணாநிதிக்குப் பிரியமான போர்வாள். பின்னர் சதி குற்றச்சாட்டில் திமுகவிலிருந்து நீக்கப்பட்டார். மறுமலர்ச்சி திமுகவைத் தொடங்கினார் ஸ்டாலினை வாரிசாக முன்னிறுத்திய திமுகவின் குடும்ப அரசியலை எதிர்த்து பல ஆண்டுகள் பல கூட்டணிகளை அமைத்தார். இப்போதைக்கு திமுக தலைமையிலான கூட்டணியில் இருக்கிறார்.

தமிழக அரசியல் மேடையில் தலைவர்கள் தங்கள் சொந்தக் கொடிகளை ஏற்றி,தங்கள் சொந்தப் புரட்சிகளை அறிவித்து, தங்கள் சொந்த நியாயங்களை முன்னிறுத்தி எத்தகைய காட்சிகளையும் அரங்கேற்றலாம். ஆனால், காலம் இரக்கமின்றி அவர்களை அலைக்கழித்து மீண்டும் தொடங்கிய இடத்திற்கே அனுப்புகிறது. வாழ்க்கை என்பது வட்டம் என்பது இதனால் தானோ?

## பௌத்த மதத்துக்கு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசியவாத அமைப்புக்கள் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரா கத் திரும்பின. அதற்கு அரசாங்கத்தின் முழுமையான ஒத்து ழைப்பு இருந்தது.

குறிப்பிட்ட சில கால கட்டங்களில், கிறிஸ்தவ சுவிஷேசக் குழுக்கள் பௌத்தர்களைச் சட்ட விரோதமான முறையில் மதமாற்றம் செய்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அவர்களின் பக்கமும் இந்த அச்சுறுத்தல் பிம்பம் திசை திருப்பப்பட்டது.

தேர்தல் காலங்களில் பெரும்பான்மையின மக்களின் வாக்குகளைத் தங்களுக்கு ஆதரவாகத் திரட்டுவதற்கு “பௌத்தம் ஆபத்தில் உள்ளது” என்ற எச்சரிக்கை வரலாற்று ரீதியாக சக்திவாய்ந்த ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

பெரும்பான்மைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் பொருளாதார நெருக்கடிகள், ஊழல் குற்றச்சாட்டுக்கள் அல்லது மக்கள் மத்தியில் தங்களது செல்வாக்கை இழக்கும் நிலையை எதிர்நோக்கும் போது மதத்துக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்பதைப் போன்ற தோற்றப்பாட்டை உருவாக்குவதன் மூலம் சிங்கள மக்களின் வாக்குகளை ஒரு குறிப்பிட்ட தலைவருக்குப் பின்னாலோ அல்லது அரசியல் அணிக்குப் பின்னாலோ ஒருங்கிணைக்க இந்த தந்திரோபாயம் பெரிதும் உதவியது.

இருப்பினும், அண்மைக் காலமாக, இத்தகைய உணர்ச்சிபூர்வமான அரசியலின் செல்வாக்கு கணிசமானளவுக்கு குறைந்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. 2022 பொருளாதார வீழ்ச்சியையடுத்து இன, மத வேறுபாடுகளைக் கடந்து கிளர்ந்தெழுந்த மக்கள் பெரும்பான்மையின அரசியல்வாதிகளின் முகத்திரையைக் கிழித்தெறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நாணய நிதிய...

கட்டுப்படுத்தி அதன் ஊடாகவே டொலர் கையிருப்பைச் சேமிக்க முடியும்.

அதன் பின்னரே மாற்று விகிதம் ஒரு நிலையான மட்டத்துக்கு வரும். இந்த செயல்முறை நடப்பதற்கு இன்னும் சில மாதங்கள் எடுக்கும்" என அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நாட்டின் எரிபொருள் விலை குறித்துக் கருத்து வெளியிட்ட அவர், பெற்றோலை விட டீசல் விலையை ஒரு குறிப்பிட்ட அளவினால் அதிகரிக்க வேண்டிய தேவை தற்போது காணப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

சந்தையில் தற்போது நிலவும் விலையை விடக் குறைவான விலைக்கே டீசல் விற்கப்படுவதாகவும், உலகச் சந்தை விலைக்கு ஏற்ப உள்நாட்டு எரிபொருள் விலையை மாற்றியமைக்காவிடின், அடுத்த கட்டத்தில் உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது மிகக் கடுமையான முறையில் விலையை உயர்த்த நேரிடும் என்றும் அவர் மேலும் எச்சரித்தார். (அ)

## கடுமையான உணவு...

நீண்ட காலப் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு வரும் நிலையில், தொடர்ந்து அழுத்தத்தில் இருக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே உணவு நெருக்கடியை எதிர்கொள்வார்கள் எனவும் அந்த ஆய்வின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனது எரிசக்தித் தேவையில் 63 சதவீதத்தை மத்திய கிழக்கைச் சார்ந்துள்ளது.

அத்துடன், வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணத்தில் 44 வீதம் வளைகுடா நாடுகளிலிருந்து கிடைக்கின்றது.

மேலும், 45 வீத தேயிலை ஏற்றுமதி வளைகுடா நாடுகளுக்கும் செல்கிறது.

இந்த நிலையில், எரிசக்தி விலைகள், வர்த்தகம் மற்றும் வருமானம் ஆகியவற்றில் ஏற்படும் அதிர்ச்சி தன்மை, தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாதிப்பதாக உலக உணவுத் திட்டம் கூறியுள் ளது.

இதன் விளைவாக, குறித்த குடும்பங்களுக்குத் தேவையான உணவின் தரத்தையும், அளவையும் பேணும் நிலை படிப்படியாக குறைவடையும் என உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது. இந்த நிலையில், தீவிரமடைந்து வரும் மத்திய கிழக்கு நெருக்கடி, உலகளாவிய ரீதியில் மேலும் பல மில்லியன் மக்களைப் பட்டினிக்குத் தள்ளக்கூடும் என ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் எச்சரித்துள்ளது.

இவ்வாறான பின்புலத்தில், நெருக்கடியின் முழுமையான தாக்கம் இன்னும் உணரப்படவில்லை என்பதே மிகப்பெரிய கவலைகளில் ஒன்றாகும் என உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## பயங்கரவாத...

நேற்று கிளிநொச்சி பழைய கச்சேரி முன்பாகப் பெரும் திரளான இளைஞர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

“குரல்வளையின் விலங்குடைக்க அணிதிரள்வோம்” என்னும் பொருண்மையில், கைது செய்யப்பட்டுள்ள சொல்லிசைக் கலைஞர் சங்கீர்த்தனனை விடுதலை செய்யக் கோரியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாகத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்படும் இன அடக்குமுறைகளைக் கண்டித்தும், கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் இப்போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கண்டனப் பேரணியில் ஈடுபட்டவர்கள், “பாடினால் பயங்கரவாதமா? தாயகக் கலைஞனை உடனே விடுவி!”, “தமிழர் வலிகளைப் பாடுவதும் எழுதுவதும் குற்றமா?”, “ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் பி.ரி.ஏ-யை உடனே நீக்கு!”, “சட்டத்தின் பெயரால் நடக்கும் அரச பயங்கரவாதத்தை உடனே நிறுத்து!”, “உரிமைக்குரல் எழுப்பத் தமிழருக்குத் தடையா? ஜனநாயகம் எங்கே?”, “உடைப்போம் உடைப்போம்! குரல்வளையின் விலங்கை உடைப்போம்!” போன்ற முழக்கங்கள் அடங்கிய வாசக அட்டைகளை ஏந்தியவாறும், உணர்ச்சிப் பூர்வமாக முழக்கங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பேரணியில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர் சமூகம், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (அ)

## ஊடகவியலாளர்களுக்கு...

ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் திகதியன்று இந்த விசேட வர்த்தமானி குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின்படி, புதிய நிறுவகமானது சுயாதீனமாக இயங்கும் ஒரு கூட்டுத்தாபனமாக அமையவுள்ளதுடன் பின்வரும் முக்கிய குறிக்கோள்களைக் கொண்டு செயற்படவுள்ளது.

ஊடகத்துறையில் பணியாற்றும் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள், ஒளிபரப்பாளர்கள், ஊடக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து உயர்தொழிலாளர்களையும் ஒரே தொழில்சார் ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டுவருதல்.

தகைமை வாய்ந்த ஊடகவியலாளர்களை உறுப்பினர்களாக நிரலிற் சேர்த்தல் மற்றும் அவர்களின் தராதரங்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமளித்தல்.

ஊடகக் கல்வி, பயிற்சி நெறிகள் மற்றும் பரீட்சைகளை நடத்தி, சர்வதேச ஊடகப் போக்குகளுக்கு ஏற்ப ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல்.

மிக முக்கியமாக, அனைத்து உறுப்பினர்களும் மாணவர்களும் பின்பற்றுவதற்கென விசேட நடத்தைக் கோவையொன்றைத் தயாரித்து, தொழில்சார் ஒழுக்காற்றைப் பேணுதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் இந்த நிர்வகத்தின் நிருவாகக் கருமங்களை முகாமைத்துவம் செய்வதற்காக 15 உறுப்பினர்களைக் கொண்ட ஆளும் பேரவையொன்று நியமிக்கப்படவுள்ளது. இதில் ஊடகத்துறையில் தகைமையும் அனுபவமும் மிக்க 8 பேர் தேர்தல் மூலமும், 7 பேர் நியமனம் மூலமும் உள்வாங்கப்படுவர்.

ஆளும் பேரவை முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் வரை, தற்காலிகமாக “இடைக்காலப் பேரவை” ஒன்று அமைச்சரினால் நியமிக்கப்படும். இந்த இடைக்காலப் பேரவையில் அமைச்சின் செயலாளருடன், ஊடகத் துறையில் ஆகக்குறைந்தது 20 வருட அனுபவம் வாய்ந்த 6 நிபுணர்கள் இடம்பெறுவர் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மூவின மக்களும்...

மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முறையான அரசியல் தீர்வே கொண்டுவரப்படும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அரசியல் இலாபங்களுக்காக மீண்டும் நாட்டில் இனவாதத்தைத் தூண்டி, மக்களைக் குழப்ப நினைப்பவர்களின் முயற்சி இனி ஒருபோதும் பலிக்காது என்றும் அவர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

“தற்போதைய அரசாங்கம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சாதகமாகச் செயல்படுகிறது” எனத் தெற்கில் பரப்பப்படும் இனவாதக் கருத்துக்கள் மற்றும் புதிய அரசியலமைப்புக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்,

“அரசாங்கம் புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வந்தாலும், அது நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாகவே அமையும். இது குறித்துப் பொதுமக்களுக்கு உரிய தெளிவூட்டல்களை நாங்கள் வழங்குவோம்.

அரசாங்கம் சரியான பாதையிலேயே பயணிக்கிறது என்பதைப் பெரும்பான்மைச் சிங்கள மக்களும் உணர்ந்துள்ளனர். அவர்கள் எமக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளனர் எமது அடுத்தகட்ட செயல்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள்” என நம்பிக்கை வெளியிட்டார். (அ)

## சாகும்வரை உணவு...

தெரிவித்தார்.

சுரேஷ் சாலே நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்படவில்லை என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பிறப்பித்த உத்தரவின் பேரிலேயே அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த உத்தரவு தற்போது நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

கடந்த இரவு சாலேவுக்கு ஒரு கரண்டி சோறும் முள்ளங்கிச் சொதியும் மாத்திரமே உணவாக வழங்கப்பட்டுள்ளதுடன், அதுவும் தரைப்பகுதியில் பத்திரிகைத் தாள் ஒன்றை விரித்து, அதன் மீதே பரிமாறப்பட்டுள்ளது.

அந்த உணவை அவர் கையில் எடுக்க முயன்ற போது, குழம்பு ஊறியதால் பத்திரிகைத் தாள் கிழிந்து உணவு முழுவதும் தரையில் விழுந்துள்ளது.

இந்த மனிதாபிமானமற்ற, கேவலமான நடத்தையால் கடுமையான மன உளைச்சலுக்குள்ளான சுரேஷ் சலே, நேற்றிரவு முதல் உணவு, தண்ணீர் மற்றும் மருந்துகள் என அனைத்தையும் தவிர்த்து, மரணத்தை இலக்காகக் கொண்டு உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

இன்று (நேற்று)

காலை அவரைக் காண்பதற்காகச் சென்ற அவரது சகோதரர் மற்றும் மகனிடம், ”பொலிஸார் என்னை ஒரு நாயை விடவும் கேவலமாக நடத்துகிறார்கள், நான் செய்த தவறு என்ன?” எனக் கூறி அவர் கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

இத்தகைய பொய்க் குற்றச்சாட்டுகளுடன், சித்திரவதைகளை அனுபவித்து வாழ்வதை விட இறப்பதே மேல் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவரங்கள் அனைத்தும் அங்கிருந்த 7 பொலிஸாரின் முன்னிலையிலேயே அவர் தனது மகனிடம் பகிர்ந்துள்ளார் என்றும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியிலுள்ள உண்மைகளை மூடிமறைப்பதற்காகவே அரசாங்கம் அவரைத் தற்கொலைக்குத் தூண்டும் நோக்கில் இவ்வாறான சித்திரவதைகளைச் செய்து வருவதாக உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.

## 13ஐ அதில் உள்ளபடியே...

உள்ளவாறே நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு கட்சியாகவும், அரசியல் சக்தியாகவும் நாம் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

‘மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் கோழைத்தனமான அநுரவின் வெறியாட்டத்தை தோற்கடிப்போம்’ என்ற கருப்பொருளில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க, மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டிய இந்த தருணத்தில், நாட்டு மக்கள் தமது குரல்களாலும் வாக்குகளாலும் தமது நிலைப்பாடுகளை எடுப்பதற்கு காத்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கான சிறந்த வழி மாகாண சபை தேர்தல் ஆகும்.

மக்கள் முகம் கொடுத்திருக்கும் துயரம், அழுத்தம், அசௌகரியம், வலி மற்றும் வருத்தத்திற்கு பதிலளிக்க மக்கள் ஆயத்தமாகியே இருக்கின்றனர். தற்போதைய ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் மக்களுக்கு என்னவாகினும் தமது விருப்பம்போல் நடந்து வருவதனால், மக்கள் இவர்களுக்கு தக்க பாடம் புகட்ட தயாராகவே உள்ளனர்.

நாட்டு மக்கள் இப்போதாவது பாடம் கற்று, அலைக்கு அடிபட்டுச் சென்று வாக்களிப்பதற்கு பதிலாக, ஒரு தரப்பு வெற்றிபெற வேண்டும் என்றால் பெரும்பான்மை காணப்படுபவர்களுக்கு மட்டுமே வாய்ப்பளிக்க வேண்டும். இல்லையெனில் அபரிமிதமான அதிகாரத்தில் அதிகார மமதையால் பைத்தியம் பிடித்து, நாட்டைக் குழப்பி தங்களை மட்டுமே நினைத்து முடிவுகள் எடுக்கும் தவறான அரச ஆளுகை முறை உருவாகும். ஆகையினால் அடுத்த தேர்தலிலாவது இந்த தவறான முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

நாட்டு மக்களுக்கு ஒரே மாற்றாக காணப்படும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் பெரும்பான்மை போதுமானது. அறுதிப் பெரும்பான்மை, அபரிமிதமான அதிகாரம் தேவையில்லை. எந்த தரப்பிற்கும் அபரிமிதமான அதிகாரம் கிடைத்தால் மக்களும் நாடுமே அநாதரவாவார்கள்.

மாகாண சபை தேர்தல் நடத்துமாறு அரசாங்கத்திற்கு வலியுறுத்த, மாகாண சபை தேர்தல் தொடர்பான தேசிய நடவடிக்கைக் குழுவொன்றை நாம் ஸ்தாபிப்போம். இதற்கு பதவி, பட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அல்லாமல் அனைவரும் இந்த நடவடிக்கைக் குழுவில் பிரதிநிதித்துவம் செய்வர். மக்கள் துயரத்தைத் தீர்ப்பதற்கு, மக்கள் படும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு மாகாண சபை தேர்தலை நடத்துமாறு இதன் ஊடாக வலியுறுத்துவோம்.

அரசியல் நுட்பம் தெரியாதவர்களே மாகாண சபையானது பயனற்றது என்று தெரிவித்து வருகின்றனர். மாகாண சபைகள் முறையாக இயங்கினால் இதனூடாக பெரும் பங்களிப்புகளைப் ஆற்ற முடியும். வரலாறு நெடுகிலும் சிறப்பான பல சேவைகளை ஆற்றிய முதலமைச்சர்கள் இருந்தனர். சில முதலமைச்சர்கள் எந்தளவு திறமை வாய்ந்தவர்களாக காணப்பட்டனர் என்றால், தமது மாகாண சபை எல்லைக்குள் சர்வதேச பன்னாட்டு நிறுவனங்களை கூட கவர்ந்திழுத்து பெரும் முதலீடுகளை கொண்டு வந்தனர்.

நாட்டின் இறையாண்மை, ஆள்புல ஒருமைப்பாடு, அரசியல் சுதந்திரம் ஆகியவற்றை பாதுகாத்து, நாட்டில் வாழும் பல்வேறு சமூகங்களுக்கும் உன்னத ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தும் அதிகார பகிர்வுக்கு இந்த மாகாண சபைகள் ஊடாக வழி கிட்டின. இது நாட்டின் உச்ச சட்டமாதலால் “13 பிளஸ்“ அல்லது “13 மைனஸ்“ என நாம் கூற மாட்டோம் -என்றார். (அ)

## முல்லைத்தீவு பொலிஸ்...

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விமானப் படையினர், கடற்படையினர், இராணுவத்தினர், சிவில் பாதுகாப்புப் படையினரின் வரிசையில் பொலிஸாரும் மக்களின் காணிகளை அபகரித்து வைத்திருக்கின்றனர்.

எனவே மக்களுடைய அந்த தனியார் காணியை முல்லைத்தீவுப் பொலிஸார் உடனடியாக விடுவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இதன்போது இன்னும் மூன்றுமாத காலஅவகாசம் கோரிய பொலிஸ் அதிகாரி, இன்னும் மூன்று மாதத்திற்கு பிற்பாடு குறித்த காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# 2029 ஆம் ஆண்டு மீண்டும் நாமல் ஆட்சிக்கு வருவார்!

## அர்ச்சுனா எம்.பி. சூளுரை

கொழும்பு, ஜூன். 07

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ 2029 இல் மீண்டும் ஆட்சிக்கு வருவார் என்று பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய போக்கின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி காரணமாக, வாக்காளர்கள் மீண்டும் ராஜபக்ஷக்களை அரசாங்கத்திற்கு கொண்டு வரக்கூடும் என்று அவர் வாதிட்டுள்ளார்.

“இதைப்பதிவு செய்து வைத்துக்கொள்ளுங்கள். 2029 இல் நாமல் வருவார். அதை யாராலும் தடுக்க முடியாது. நாமல் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற தனிப்பட்ட விருப்பம் எனக்கு இல்லை. ஆனால், நாடு இருக்கும் நிலையைப் பார்த்தால், மக்கள் அதை மீண்டும் ராஜபக்ஷக்களிடமே ஒப்படைப்பார்கள்,” என்று அவர் கூறினார்.

ஊடகவியலாளர்களிடம் பேசிய அர்ச்சுனா, தற்போதைய எதிர்க்கட்சியையும் விமர்சித்தார். ஒரு திறமையான எதிர்க்கட்சித் தலைவர் வலுவானவராகவும், வெளிப்படையாகப் பேசக்கூடியவராகவும் இருக்க வேண் டும் என்று அவர் கூறினார்.

“எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் உள்ள பிரச்னை என்னவென்றால், அவர் மிகவும் மென்மையானவர். நீங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் போது, பூங்கொத்துகளை வீச முடியாது. செங்கற்களைத்தான் வீச வேண்டும்,”-என்றார்.

நாட்டில் தற்போது வலுவான எதிர்க்கட்சித் தலைவர் யாரும் இல்லை என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்தின் பேச்சுத் திறனைப் பாராட்டிய அதேவேளை, தலைவருக்குத் தேவையான ஏனைய குணங்கள் அவரிடம் இல்லை என்றும் அர்ச்சுனா குறிப்பிட்டார்.

நாமல் ராஜபக்ஷ ஒரு தகுதியான எதிர்க்கட்சித் தலைவராக இருப்பாரா என்று கேட்கப்பட்டதற்கு, ராஜபக்ஷவிற்கு அந்தப் பதவி தேவையில்லை என்று அவர் கூறினார்.

“நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக வேண்டிய அவசியமில்லை. அவர் ஜனாதிபதியாவார். இதை நீங்கள் பதிவில் வைத்துக் கொள்ளலாம். அந்த நேரத்தில் நான் அரசியலில் இருக்க மாட்டேன், ஆனால் நீங்கள் பார்ப்பீர்கள்,” என்று அவர் குறிப்பிட்டார். (அ)

# பலத்த காற்று எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 07

பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடற்பரப்புகள் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை நேற்று முற்பகல் 11.30 மணி முதல் இன்று முற்பகல் 11.30 மணி வரை செல்லுபடியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணிக்கு 60-70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதுடன், அந்த கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படலாம்.

அதேபோல், திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக காங்கேசன்துறை வரையும் மற்றும் கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையுமான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணிக்கு 50 - 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதுடன், அந்த கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படலாம்.

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடல் அலைகளின் உயரமானது 2.0 - 2.5 மீற்றர் வரை உயரக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# வலுவான அரசியல் சக்தியை கட்டியெழுப்புவதே நோக்கம்!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூன். 07

எல்லையற்ற ஊழல்கள் மற்றும் நீதிமன்ற சுதந்திரத்திற்கு விடுக்கப்படும் சவால்களக்கு எதிராக ஒரு வலுவான அரசியல் சக்தியைக் கட்டியெழுப்புவதே பொதுஜன பெரமுனவின் நோக்கம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் செயற்குழு மற்றும் அரசியல் சபைக்கூட்டம், கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உள்ள விவசாயிகள், மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் மீது திணிக்கப்படும் பொருளாதாரச் சுமைகள், தரம் குறைந்த நிலக்கரியைக் கொண்டு வந்து நாட்டிற்கு ஏற்படுத்தப்பட்ட பெரும் நட்டம், எல்லையற்ற ஊழல்கள் மற்றும் நீதிமன்ற சுதந்திரத்திற்கு விடுக்கப்படும் சவால்கள் ஆகியவற்றுக்கு எதிராக ஒரு வலுவான அரசியல் சக்தியைக் கட்டியெழுப்புவதே பொதுஜன பெரமுனவின் நோக்கமாகும்.

யாழ்ப்பாணத்தில் புலிப் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் ரெப் பாடல் பாடிய இளைஞர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். ஆனால் கடந்த தேர்தல் மேடைகளில் தேசிய மக்கள் சக்தி தரப்பில் பிரபாகரனின் புகழைப் பாடும் பாடலுக்கு ஜனாதிபதி வேட்பாளர் கையசைத்து நின்றபோது பயங்கரவாதத் தடைச் சட்டம் அவர் மீது பாயவில்லை. ஆனால் ஒரு சாதாரண இளைஞன் கூறும்போது சட்டம் பாய்கிறது. சட்டம் அனைவருக்கும் சமம் என்றால், அந்தப் பாடலை உருவாக்கிய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் வடக்கில் அரசியல் செய்பவர்களையும் கைது செய்ய வேண்டும்.

அரசாங்கம் டொலரின் மதிப்பை நிலையானதாக மாற்றியுள்ளதாகக் கூறுவது அப்பட்டமான பொய். அரசாங்கம் வாயைத் திறந்தாலே பொய் தான் சொல்கிறது. பொய்களைக் கூறுவதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது, அதற்கான முறையான திட்டத்தை அரசாங்கம் உடனடியாக முன்வைக்க வேண்டும் - என்றார். (அ)

# அரிசி இறக்குமதி குறித்து டட்லி சிறிசேன கவலை!

கொழும்பு, ஜூன். 07

அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்ய எடுத்த முடிவு குறித்து தான் கவலையடைவதாக பிரபல தொழிலதிபர் டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார். இந்தத் தீர்மானத்தின் காரணமாக, ஒரு கிலோ நெல்லுக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட விலை குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கையில்-

நெல்லுக்கு அரசாங்கம் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட விலையை நிர்ணயித்துள்ளது. உண்மை நிலைவரப்படி, நாட்டரிசிக்கு 120 ரூபாயும், சம்பா அரிசிக்கு 125 ரூபாயும், கீரி சம்பாவுக்கு 130 ரூபாயும் வழங்கப்படுகிறது.

இந்த விலைகளை நிர்ணயிக்கும் போது ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். நாட்டரிசியை விட சம்பா நெல்லின் எடையும் அறுவடை விளைச்சலும் இயல்பாகவே குறைவு. அதேபோல், சம்பாவை விட கீரி சம்பாவின் எடையும் விளைச்சலும் இன்னும் குறைவு.

இதன் காரணமாக, தங்களுக்கு வழங்கப்படும் விலை போதுமானதாக இல்லாததால் விவசாயிகள் கீரிச் சம்பா மற்றும் சம்பா பயிர்ச்செய்கையை கைவிட்டு, நாடு அரிசியை மட்டுமே தொடர்ச்சியாக பயிரிடுகின்றனர். இதனால் சந்தையில் சமநிலைத்தன்மை இல்லாமல் போய், நாடு அரிசியின் வரத்து அதிகரித்து அதன் விலை முற்றிலுமாக வீழ்ச்சியடைகிறது. மறுபுறம், ஏனைய அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அவை அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதுதான் தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் வியாபாரம் மட்டுமே செய்கிறோம். இருப்பதைக் கொள்வனவு செய்து, அரிசியாக்கி வழங்குகிறோம். சந்தையை அல்லது விலைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் எங்களுக்கு இல்லை. அது ஆட்சியாளர்களால் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்னை.

இந்த நிலை நீடித்தால், எதிர்காலத்தில் விவசாயிகள் தங்களது நெல்லை விற்க முடியாமல் போகும் நிலை ஏற்படும். தற்போது நமது நாட்டிற்கு 157,000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. சில விவசாயிகள் இந்த விலை வீழ்ச்சிக்கு எம்மீது குற்றம் சுமத்துவதனை நான் கண்டேன். ஆனால், உண்மையில் இன்று நாட்டுக்கு அரிசி இறக்குமதி செய்யும் பிரச்னை மட்டும் இல்லாவிட்டால், விவசாயிகளுக்கு இந்த விலைப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. அவர்கள் உறுதியாக ஒரு கிலோ நெல்லை 125 அல்லது 130 ரூபாய்க்கு விற்றிருக்க முடியும். ஆனால் தற்போது அது 90, 100 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். எனக்கும் இதைத்தான் கூற வேண்டியுள்ளது- என்றார். (அ)

# தேனீக்களின் வீழ்ச்சியால் உணவு உற்பத்திக்கு ஆபத்து!

## நிபுணர்கள் எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 07

இலங்கையின் விவசாயத் துறையில் தேனீக்கள் உள்ளிட்ட மகரந்தச்சேர்க்கை உயிரினங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவது உணவு உற்பத்திக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால் பயிர்ச்செய்கைக்கான செலவு அதிகரிப்பதுடன், விவசாயிகளின் இலாபமும் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், தேனீக்களுக்குப் பாதுகாப்பான விவசாய முறைகளைப் பின்பற்றுமாறு விவசாயிகளுக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் தரவுகளின்படி, தேனீக்களின் மகரந்தச்சேர்க்கை மூலம் பயிர் அறுவடையை 20 வீதம் தொடக்கம் 70 வீதம் வரை அதிகரிக்க முடியும் என்றபோதிலும், நவீன விவசாய முறைகள், வாழ்விட அழிப்பு மற்றும் அதிகளவிலான பூச்சிக்கொல்லிப் பயன்பாடு காரணமாக இந்த தேனீக்கள் கடுமையான அழிவை எதிர்நோக்கியுள்ளன.

பெரிய அளவிலான ஒற்றைப் பயிர்ச் செய்கை விரிவாக்கம் மற்றும் இயற்கைத் தாவரங்களின் அழிப்பு காரணமாகத் தேனீக்களின் இயற்கையான வாழ்விடங்கள் சுருங்கி வருவதுடன், ஒரே மாதிரியான விவசாய நிலப்பரப்புகள் தேனீக்களின் உயிர்வாழ்வுக்குத் தேவையான பலதரப்பட்ட உணவு வகைகளை வழங்குவதில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிக விளைச்சலை பெறும் நோக்கில், மகரந்தச் சேர்க்கை உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைப் பொருட்படுத்தாமல், விவசாயிகள் வீரியம் மிக்க நச்சு இரசாயனப் பூச்சிக்கொல்லிகளையும் உரங்களையும் பயன்படுத்துவதாக விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் பி. சிசிர குமார தெரிவித்துள்ளார். (அ)

# நுரைச்சோலைக் கடலில் நீராடச் சென்ற மூவர் பலி!

கொழும்பு, ஜூன். 07

புத்தளம், நுரைச்சோலை - தளுவ கடல் முகத்துவாரப் பகுதியில் நீராடச் சென்ற மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர்கள் 18 மற்றும் 19 வயதுடைய இரு இளம் பெண்களும், 24 வயதுடைய ஒருவருமே என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media